# நாடகமும் அரங்கியலும்

# (Drama and Theatre)

## G.C.E. (O/L) Past Papers

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சை 2006-2011 வரையான கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும்

தொகுப்பு
க. திலகநாதன்

ஜனனி வெளியீட்டகம்
2012

# நாடகமும் அரங்கியலும்
# (Drama and Theatre)

## G.C.E. (O/L) Past Papers
## 2006 - 2011

தொகுப்பு

க. திலகநாதன்
B.A. Hons, Dip. in Ed., M.Phil. (Drama) M.A. Edu

ஜனனி வெளியீட்டகம்
பொலிகண்டி, வல்வெட்டித்துறை

2012

நூல் - நாடகமும் அரங்கியலும்: க.பொ.த. (சா/த) பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும் (2006 - 2011)

விடயம் - நாடகமும் அரங்கியலும்

ஆசிரியர் - கயிலைநாதன் தில்லைநாதன்

மீள் பதிப்பு - 2012

வெளியீடு - ஜனனி வெளியீட்டகம்,
புதுவளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை

அச்சுப் பதிப்பு - குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு- 6

விலை - 150/=

Title - Drama and Theatre: G.C.E. (O/L) Exam Papers and Answers

Subject - Drama & Theatre

Author - Kailainathan Thilaganathan

Edition - 2012

Printed by - Kumaran Press (Pvt) Ltd.

Published by - Janani Publishers
Puthu Valavu, Polikandy, Velvetiturai

Price - Rs. 150

# என்னுரை

நாடகமும் அரங்கியலும் என்கின்ற கலைத்துறை கற்கை நெறியாக வரத் தொடங்கியதும் அதன் தேவை விசாலிக்கத் தொடங்கி விட்டது. இன்று க.பொ.த. (உத) தரத்திற்கு மட்டுமல்லாது தரம் 6 தொடக்கம் 2007 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய கலைத்துறைகளுடன் நாடகமும் அரங்கியலும் என்கின்ற கலைத் துறையும் தனித் துறையாக கற்கின்ற நிலை வந்து விட்டது.

ஒவ்வொரு மாணவரும் தமக்குப் பிடித்த துறையை தெரிவு செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. பாடத் தெரிந்தவர் சங்கீத பாடத்தையும், ஆடத் தெரிந்தவர் நடன பாடத்தையும், படம் வரையத் தெரிந்தவர் சித்திரப் பாடத்தையும் தெரிவு செய்ய சந்தர்ப்பம் அளிப்பது போல நடிக்கும் ஆற்றல் உள்ளவர்களுக்குரிய ஒரு தெரிவாக இப்பாடநெறி அமைகிறது. இதுகால வரை இடைநிலைக் கல்வி ஆரம்பத்தில் ஏனைய கலைத்துறைகள் அறிமுகப் படுத்தப்பட்டது போல் இல்லாது தரம் 10 இல் இப்பாடநெறி அறிமுக மாவதால் பொதுவாக மாணவரிடத்தில் பாடநெறி சார்ந்த ஒரு பரிச்சயமற்ற நிலை காணப்படுகிறது. இத்துடன் நாடகத்தை முறையாகக் கற்றவர்கள் கற்பித்தலில் ஈடுபடுவது குறைவாகவே உள்ளது. ஏனைய துறைகளைக் கற்று நாடகம் கற்பிக்கின்றவர்களே அதிகம். அவர்களும் அரங்க நடவடி க்கைகளில் மேலும் மேலும் ஈடுபட வேண்டும். அது தொடர்பான அறிமுறை சார்ந்து மட்டும் நில்லாது செய்முறை சார்ந்தும் பல பயிற்சிகளில் ஈடுபட்டு நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து அளிக்கை செய்ய வேண்டும். இதனூடாக இப்பாடநெறி சார்ந்த கற்றல் கற்பித்தலை மேல் நிலைக்கு கொண்டு செல்ல முடியும்.

*க. திலகநாதன்*
*விரிவுரையாளர் (நாடகத்துறை)*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*
*கோப்பாய்.*

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - I (2006)

01. பலே நடனத்தின் முக்கிய அம்சம்.
(1) ஆட்டம் மூலம் சம்பவத்தைச் சித்திரிப்பது.
(2) தனி ஆட்டம்
(3) கூடி ஆட்டம் ஆடுதல்
(4) பாடல் முறைமை

02. நாட்டார் கூத்து மரபைச்சாராத நாடகம்.
(1) காத்தவராயன் கூத்து
(2) பாவைக்கூத்து
(3) வடமோடி
(4) ஸ்பெசல் நாடகம்

03. நடிப்பின்பொழுது உடம்பினைத் தளர்வாக வைத்திருப்பதற்கு உதவும் பயிற்சி.
(1) சுவாசப் பயிற்சி (2) தளர்ச்சிப் பயிற்சி
(3) புலனடக்கப் பயிற்சி (4) அரங்கவிளையாட்டுக்கள்

04. கூத்து வடிவம் அல்லாத நாடகம் யாது?
(1) தென்மோடி (2) மகிடி
(3) நாட்டிய நாடகம் (4) தென்பாங்கு

05. பாரம்பரிய சிங்கள நாடக மரபுக்குள் வராதது.
(1) கோலம் (2) சொக்கரி
(3) காமன்கூத்து (4) நாடகம்

06. இலங்கையிற் கூத்துப் பாரம்பரியமாகப் பயிலப்படுமிடம்.
(1) மட்டக்களப்பு (2) மன்னார்
(3) மலையகம் (4) திருகோணமலை

07. இந்து ஐதிகக் கதை விளக்கங்கள் இல்லாத விழா.
(1) தீபாவளி (2) நவராத்திரி
(3) மகாசிவராத்திரி (4) தைப்பொங்கல்

08. கட்டியக்காரன் என்பவர்
(1) அண்ணாவியார்
(2) நாடகப் பாத்திரங்களுள் ஒன்று
(3) நாடகக் கதையை அறிமுகஞ் செய்பவர்
(4) பக்கப்பாட்டுக்காரர்

09. நான்கு வகை அபிநயங்கள் பற்றி முதன் முதலில் கூறுவது

(1) சிலப்பதிகாரம் (2) தசரூபகம்

(3) கூத்துநூல் (4) நாட்டிய சாஸ்திரம்

10. அங்கதம் என்பது

(1) ஒருவரைப் புகழும் நாடக வடிவம்

(2) தலைவனைப் புகழும் நாடக வடிவம்

(3) தலைவியைப் புகழும் நாடக வடிவம்

(4) குறைபாடுகளைக் கிண்டல் செய்யும் நாடக வடிவம்

11. கூத்து என்பது.

(1) ஆட்ட முறையிலானது

(2) கதை தழுவி வருவது

(3) வட்டக் களரியில் நடத்தப்படுவது

(4) தனியே ஆட்டத்தை மாத்திரமே குறிப்பது

12. பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய நாடகம்

(1) உடையார் மிடுக்கு

(2) விதானையார் வீட்டில்

(3) பொருளோ பொருள்

(4) சுந்தரம் எங்கே?

13. வரவுப் பாட்டு என்பது

(1) பாத்திரம் தானே பாடுவது

(2) அண்ணாவியார் பாடுவது

(3) சேவகர் பாடுவது

(4) பக்கப்பாட்டுக்காரர் பாடுவது

14. நாடக அளிக்கைக்கு மிக அத்தியாவசியமானது.

(1) நடிகர் (2) மேடை ஒளி

(3) பார்வையாளர் (4) அரங்கவெளி

15. குரற் பயிற்சிக்கான தேவை

(1) குரலை முனைப்புறுத்துவதற்கு

(2) வேண்டிய முறையிலே குரலைக் கொண்டுவருவதற்கு

(3) வேண்டிய குரல் ஏற்ற இறக்கங்களைக் கொண்டுவருவதற்கு

(4) சொல்லாடலை விரும்பிய படி மாற்றிக் கொள்வதற்கு

16. நாடகத்தில் இசையின் தேவை.
    (1) நாடகப் பின்புலத்தைப் புலப்படுத்துவதற்கு
    (2) பாடல்களைப் பாடுவதற்கு
    (3) உணர்ச்சிகளை அழுத்திக்காட்டுவதற்கு
    (4) பாத்திரங்களில் மன இயல்புகளைக் காட்டுவதற்கு

17. நாடக விமர்சனத்தின் உண்மையான பயன்பாடு
    (1) நாடக ஆக்கத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவது
    (2) நாடக ஆக்குநரை ஊக்குவிப்பது
    (3) நடிகர்களைக் கண்டிப்பது
    (4) பார்வையாளர் நாடகத்தை நன்கு விளங்க உதவுவது

18. ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றிற் சம்பந்தப்படுபவர்கள்
    (1) எஸ். சண்முகநாதன்
    (2) எம். வி. கிருஷ்ண ஆழ்வார்
    (3) வி. வைரமுத்து
    (4) என். சண்முகரத்தினம்

19. இராவணேசன் என்னும் கூத்து
    (1) பாரம்பரிய கூத்துக்களில் ஒன்று
    (2) புதிதாக எழுதப்பட்டது
    (3) கம்பராமாயணத்தை தழுவி ஆக்கப்பட்டது
    (4) பாரம்பரிய ஆட்டங்களைக் கொண்டது

20. சூரன்போர் என்பது
    (1) ஒரு சடங்கு நாடகம்
    (2) கோவில் வீதிகளில் ஆடப்படுவது
    (3) சூரன், முருகன் போரைச் சித்திரிப்பது
    (4) மேடையில் ஆற்றப்படுவது

21 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடை தெரிவு செய்க.

21. பார்வையாளர்கள் பெரும்பாலும் நாடகம் பார்க்கச் செல்வது
    (1) மகிழ்வுறுதலுக்காக
    (2) அறிவைப் பெறுவதற்காக
    (3) தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக
    (4) தங்கள் ஓய்வுவேளையைக் கழிப்பதற்கு வேறுவழியின்மையால்.

22. துறவி நாடகத்தின் ஆசிரியர்
    (1) ஹரேந்திரநாத் சட்டோ உபாதியார்
    (2) ரவிந்திரநாத் தாகூர்
    (3) சரத்சந்திர சட்டர்ஜி
    (4) சத்தியஜித்ராய்

23. சுந்தரம் எங்கே என்னும் நாடகத்தில் வரும் சுந்தரம் அருணாச் சலத்தின்,
    (1) மகன் (2) மருமகன்
    (3) தம்பி (4) தமையன்

24. நடிகர்கள் வேடமுகம் பயன்படுத்தாத இரவிலே நடக்கப்படுவதான அரைவட்டக் களரியில் நடிக்கப்படாததான கிறிஸ்தவம் சம்பந்தப் பட்டதான சிங்கள நாடக வடிவம் எனக் கொள்ளத்தக்கது.
    (1) கோலம் (2) சொக்கரி
    (3) நுர்த்தி (4) நாடகம

25. நடிகமணி வைரமுத்துவின் நாடக சபையின் பெயர்
    (1) லங்கா சுபொத விலாச நாடகசபை
    (2) மினேர்வா நாடக சபை
    (3) டி. கே. எஸ். நாடக சபை
    (4) வசந்த கான சபை

26. பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திர எழுதாத நாடகம்
    (1) சிங்கபாகு (2) மனமே
    (3) நரிபான (4) வெல்லவகும்

27. பேராசிரியர் வித்தியானந்தன் தயாரிக்காத நாடகம்
    (1) இராவணேசன் (2) கர்ணன்போர்
    (3) வாலிவதை (4) சங்காரம்

28. தெருக்கூத்து வடிவம் காணப்படும் இடம்
    (1) மட்டக்களப்பு (2) தமிழ்நாடு
    (3) ஆந்திரா (4) யாழ்ப்பாணம்

29. நாடக நெறியாளரின் பணி என்று கூறப்பட முடியாதது
    (1) நடிகர் தேர்வு
    (2) ஒத்திகைக்கான இடத்தைத் தேடிப்பிடித்தல்
    (3) மேடை ஆற்றுகைக்கான எழுத்துருவைத் தயாரித்தல்
    (4) தொடர்புள்ள துறைகளிலுள்ள நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது.

30. நா. சுந்தரலிங்கம் எழுதிய நாடகம்.
    (1) விழிப்பு (2) அபசுரம்
    (3) பொருத்ததுபோதும் (4) தாயுமாய் நாயுமானார்

31. வலது பக்கத்தில் உள்ள சித்திரம் குறிப்பது



    (1) ஊம நாடக நடிகர்
    (2) ஒப்பேரா கலைஞர்
    (3) நாட்டிய நாடக நடிகர்
    (4) நாட்டியக்காரர்

32. வட்டக் களரியின் சாதாரண இயல்பு எனக் கூறமுடியாதது.
    (1) நாடகப் பார்வையாளர் அரங்கைச் சுற்றிவர இருத்தல்
    (2) பாரம்பரிய நாடகங்களுக்கான அரங்கு
    (3) மேலே ஒரு கட்டுமானம் இருத்தல்
    (4) ஆட்டக்கூத்துக்குரியது

33. இலங்கையின் மலையகத்தில் பிரதானமாகக் காணப் படும் ஆட்டம்
    (1) மூவிராசாக்கள் நாடகம் (2) கோவலன் கதை
    (3) அருச்சுனன் தபசு (4) காத்தவராயன் கூத்து

34. ஸ்பெசல் நாடக மரபில் வரும் இசையானது
    (1) ஆட்டத்துக்குரியனவாக அமையும்
    (2) பெரும்பாலும் கர்நாடக இசையைக் கொண்டனவாக அமையும்
    (3) தர்க்கங்களுக்கே உரியது
    (4) பண் இசையைக் கொண்டதாக அமையும்.

35. உருவில் தரப்பட்டுள்ள ஒளி அமைப்பு



    (1) பூரண ஒளி (Filood Light)
    (2) வர்ணச் சுழற்சி (Clour Wheel)
    (3) குவிமுனை ஒளி (Spot light)
    (4) மங்கு ஒளி (dimmer)

36. வலது புறத்தில் உள்ள நடனம் இந்தியாவின் எந்த நடன முறையைச் சேர்ந்தது?



    (1) கதக்
    (2) மணிப்புரி
    (3) பரதநாட்டியம்
    (4) குச்சுப்புடி

37. வலது பக்கத்திலுள்ள படத்தில் சித்திரிக்கப்படும் உணர்ச்சி



(1) வீரம்
(2) பயம்
(3) கோபம்
(4) வியப்பு

38. ஞானசௌந்தரி நாடகம்
(1) மகாபாரதக் கதையிலிருந்து வருவது
(2) இராமாயண மரபிலிருந்து வருவது
(3) கத்தோலிக்க மரபிலிருந்து வருவது
(4) நாட்டுக் கூத்து மரபிலிருந்து வருவது

39. காமன் கூத்தின் தளமாக அமையும் கதை
(1) சிவபெருமான் தன் நெற்றிக் கண்களால் மன்மதனை அழித்தல்
(2) பஞ்சபாண்டவர் வனவாசத்திற்குப் புறப்படல்
(3) இராமன் சீதையை மீட்டல்
(4) கோவலன் மாதவியை விரும்பல்

40. விலாசம் என்னும் நாடக வகை.
(1) தனியே ஆட்டத்திற்குரியது
(2) தனியே பாட்டுக்குரியது
(3) ஆட்டத்தையும் பாட்டையும் இணைத்து வருவது
(4) வசனங்களைக் கொண்டது.

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - II (2006)

01. (i) தளர்ச்சிப் பயிற்சி என்பது யாது? (3 புள்ளிகள்)
(ii) தளர்ச்சிப் பயிற்சிக்கான மூன்று உதாரணங்கள் தருக? (6 புள்ளிகள்)
(iii) தளர்ச்சிப் பயிற்சிகள் மூலம் நடிகர் பெறும் பயன்கள் யாவை? (6 புள்ளிகள்)

02. (i) ஒரு நாடகத்திற்கு மிகவும் இன்றியமையாதவர், இன்றியமையாதவர்கள் யார், யாவர்? (3 புள்ளிகள்)
(ii) ஒரு நாடகத்தைப் பூரணப்படுத்துவதற்கான மற்றையோர் யாவர்? (6 புள்ளிகள்)
(iii) நாடகம் ஒன்றினது நோக்கங்கள் எவை என்பதை மிகச் சுருக்கமாகத் தருக. (6 புள்ளிகள்)

03. பிச்சைக்காரர் ஒருவரது அல்லது மீன் விற்பவர் ஒருவரது பாகத்தினை நீங்கள் நடிக்கப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.
(i) இந்த வகிபாகத்திற்கு வேண்டிய இரண்டு மேடைப் பொருள்களைக் கூறுக. (4 புள்ளிகள்)
(ii) இந்த வகிபாகத்திற்கான (பாத்திரம்) வேட ஒப்பனை எவ்வாறு அமையும் என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)
(iii) இப்பாத்திரத்தின் உருவம் எவ்வாறு அமையும் என்பதனை வரைந்து காட்டுக. (7 புள்ளிகள்)

04. (i) சுந்தரம் எங்கே நாடகத்தில் வரும் மூன்று பாத்திரங்களின் பெயர்களைத் தருக? (3 புள்ளிகள்)
(ii) இந்த நாடகத்தில் வரும் பிரதான மோதுகை யாது? (5 புள்ளிகள்)
(iii) இந்த நாடகத்தின் நிறைகுறைகளை எடுத்துக்கூறும் ஒரு சிறு விமர்சனம் ஒன்றினைத் தருக? (7 புள்ளிகள்)

05. (i) இராவணேசன் நாடகத்தின் பிரதான கதைப் பின்னால் யாது? (4 புள்ளிகள்)
(ii) சாதாரண நாட்டுக்கூத்துகளிலிருந்து இந்நாடகம் எவ்வாறு வேறுபடுகிறது? (5 புள்ளிகள்)
(iii) இந்த நாடகத்துக்கு இராவணேசன் என்ற பெயர் எத்துணைப் பொருத்தமானது? (6 புள்ளிகள்)

06. (i) சிங்கள அரங்க மரபிலே சடங்கு ஆட்டங்களாகவுள்ளவற்றுள் இரண்டின் பெயரைத் தருக? (4 புள்ளிகள்)

(ii) நாடகம என்னும் வடிவத்தின் மதப் பின்புலத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) நுர்த்தி என்னும் சிங்கள நாடக வடிவத்தினை விளக்குக? (6 புள்ளிகள்)

07. இலங்கைத் தமிழ் அரங்கிற்கு

(i) பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பிரதான பங்களிப்பு யாது? (5 புள்ளிகள்)

(ii) பேராசிரியர் வித்தியானந்தனின் பிரதான பங்களிப்பு யாது? (5 புள்ளிகள்)

(iii) பேராசிரியர் வித்தியானந்தனின் பின் இலங்கை நாடக வளர்ச்சியில் மிக முக்கிய இடத்தை வகிப்பவர்கள் யாவர், ஏன்? (5 புள்ளிகள்)

08. (i) மலையகத்தில் நிலவும் பாரம்பரிய நாடகக் கலை வடிவங்கள் யாவை? (4 புள்ளிகள்)

(ii) மன்னார்ப் பகுதியில் காணப்படும் பிரதான நாடக மரபு யாது, அதன் பண்புகள் யாவை? (5 புள்ளிகள்)

(iii) இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் உள்ள பிரதான பாரம்பரிய நாடக வடிங்கள் யாவை? அவற்றை மிகச் சுருக்கமாக அறிமுகம் செய்க.

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - I (2007)

01. நடிகரின் பேச்சு மொழி உச்சரிப்பை விருத்தி செய்வதற்கு மிக அவசியமானது.

(1) புலனடக்கப் பயிற்சி (2) தளர்ச்சிப் பயிற்சி

(3) சுவாசப் பயிற்சி (4) ஓட்டப் பயிற்சி

02. காத்தவராயன் கூத்து பிரதானமாக எந்தத் தெய்வத்தைப் போற்று வதற்காக ஆடப்படுவது.

(1) மாரியம்மன் (2) பிள்ளையார்

(3) முருகன் (4) வைரவர்

03. சிங்களப் பாரம்பரியத்தில் வேடமுகம் பிரதானமாகப் பயன்படுத் தப்படுவது.

(1) நாடகம அரங்கில் (2) கண்டிய நடனம்

(3) கோலம் அரங்கில் (4) சப்ரகமுவ நடனம்

04. பின்வருவனவற்றுள் ஆற்றுகை சாரா கலை வடிவம் யாது?

(1) இசை (2) நடனம் (3) ஓவியம் (4) கூத்து

05. பிறிதோர் ஆள் ஆதல் (Impersonation) என்பது.

(1) நடிப்பு

(2) பாத்திரச் சித்திரிப்பு

(3) வேண்டிய ஆடையணிகளுடன் பிறிதோர் ஆள் ஆதல்

(4) நான்கு வகை அபிநயங்களைப் பயன்படுத்தல்

06. பின்வருவோருள் நாடக ஆசிரியர் அல்லாத ஒருவர்

(1) சங்கரதாஸ் சுவாமிகள் (2) எம். பி. கிருஷ்ணாழ்வார்

(3) குற்றாலலிங்கம்பிள்ளை (4) சம்பந்தமுதலியார்

07. சடங்கு ஆட்டங்களிலே முக்கியப்படாத பண்பு.

(1) கோரிக்கை

(2) நோய் நொடிதவிர்த்தல்

(3) இயற்கை அனர்த்தங்களிலிருந்து காத்தல்

(4) சீரும் செழுமையும் பெறுதல்

08. ஸ்பெசல் நாடகங்கள் கூத்து மரபிலிருந்து வேறுபடும் முறைமை.
    (1) ஆட்டங்க்ளைக் கொண்டிருத்தல்
    (2) ஆடையணிப் பயன்பாடு
    (3) பாத்திரச் சித்திரிப்பு
    (4) பின்னணி இசை பயன்படுத்தல்

09. இலங்கையில் பௌத்தர்களாலும் இந்துக்களாலும் கொண்டாடப் படும் வைபவம்
    (1) தீபாவளி (2) புதுவருடப் பிறப்பு
    (3) தைப்பொங்கல் (4) வெசாக்

10. கூத்துக்கான பாரம்பரிய ஒளி
    (1) பெற்றோமாக்ஸ்
    (2) மின்விளக்கு
    (3) தீப்பந்தங்கள்
    (4) பெரிய குத்துவிளக்கு

11. சொக்கரிக்கு இணையான தமிழ்க் கூத்து வடிவம்.
    (1) இசைநாடகம் (2) வடமோடி (3) தென்மோடி (4) மகிடி

12. சிங்கபாகு நாடக ஆசிரியர் (தயாரிப்பாளர்)
    (1) தர்மசிறி பண்டாரநாயக்க
    (2) பராக்கிரம நீரியல்ல
    (3) சரச்சந்திர
    (4) குணசேன கலப்பதி

13. பலே சாதாரண நாடகத்திலிருந்து வேறுபடுவது
    (1) தனியே பாடல் மூலம் வெளிப்படுத்தல்
    (2) தனியே ஆடல் மூலம் வெளிப்படுத்தல்
    (3) இசைப்பயன்பாட்டில்
    (4) இசையும் ஆடலும் இணைந்த முறைமையில் (6 புள்ளிகள்)

14. சினிமாவுக்கான நடிப்பு மேடை நடிப்பிலிருந்து வேறுபடும் பிரதான பண்பு.
    (1) நடிப்பு கமரா மூலம் வெளிப்படுத்தப்படுவது
    (2) நீண்ட வசனங்கள் பேசப்படுவது
    (3) ஒரு வெளியில் வைத்துக் காட்டப்படுவது
    (4) பாடி ஓடுதல்

15. பின்வருவனவற்றுள் நாடக எழுத்துருவுடன் இணையாதது.
    (1) கதைப்பின்னல் (2) பாத்திரச் சித்திரிப்பு
    (3) மோதல் (4) பாடி ஓடுதல்

16. மண்சுமந்த மேனியர் நாடகக் கதையை எழுதியவர்,
    (1) சண்முகலிங்கம் (2) சிவானந்தன்
    (3) முருகையன் (4) மௌனகுரு

17. பின்வரும் கூற்றுகளுள் பொதுப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.
    (1) நல்ல எழுத்துருவிலிருந்தே நல்ல நாடகம் ஆக்கப்படலாம்
    (2) நல்ல நாடக எழுத்துருவிலிருந்து நல்ல நாடகத்தை ஆக்கலாம்
    (3) கூடாத நாடக எழுத்துருவிலிருந்து நல்ல நாடகத்தை ஆக்கலாம்
    (4) கூடாத நாடக எழுத்துருவிலிருந்து கூடாத நாடகத்தை ஆக்கலாம்.

18 இலிருந்து 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமற்ற விடை யைத் தெரிவு செய்க.

18. இலங்கையில் வேண்டியளவு தமிழ் நாடகங்கள் தயாரிக்கப்படாத திற்கான காரணம்.
    (1) தமிழ்ச் சினிமாவின் ஜனரஞ்சகத்தன்மை
    (2) நாடகங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட பிரதேசங்களுக்குள்ளேயே நின்று விடல்
    (3) நல்ல நாடக ஆசிரியர்கள் இல்லாமை
    (4) நாடகம் பார்ப்பதற்கான சூழல் இல்லாமை

19. காத்தவராயன் கூத்தின் பிரதான அம்சம்.
    (1) பாத்திரங்கள் தம்மைத்தாமே அறிமுகம் செய்து கொண்டு வரும்.
    (2) காத்தவராயன் மாரியம்மனின் மகனாவான்
    (3) காத்தவராயனின் காதலி ஆரியப்பூ மாலையாவாள்
    (4) பிரதான எதிரி தொட்டியத்துச் சின்னான் ஆவான்

20. நாடகத்தில் இசை பெறும் முக்கியத்துவம்
    (1) நாடகக் கட்டங்களின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல்
    (2) நாடகக் கட்டங்களின் உணர்ச்சி பாவங்களை வெளிக்கொணரல்
    (3) இசை ரசனையை ஏற்படுத்தல்
    (4) நடிகர் உணர்ச்சி பூர்வமாக ஈடுபடுவதற்கு உதவுதல்

21. நாடகம் என்பது ஒரு.
(1) கூட்டுக்கலை
(2) சமூகக் கலை
(3) நடிப்பினால் உணர்த்தப்படும் கலை
(4) மேன்மக்களுக்கான கலை

22. முருகையனின் நாடகங்கள்
(1) ஒரு வரம் (2) வெறியாட்டு
(3) உயிர்த்த மனிதர் கூத்து (4) ஆதிபகவன்

23. மௌனகுருவின் நாடகங்கள்
(1) இராவணேசன் (2) சங்காரம்
(3) காலம் சிவக்கிறது (4) சக்தி பிறக்கிறது

24. சரங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்கள்
(1) பவளக்கொடி (2) விகடகவி
(3) நவீன சாரங்கதாரா (4) அரிச்சந்திர மயானகாண்டம்

25. காமன் கூத்து நாடகம்
(1) காமதகனம் பற்றியது.
(2) காமன் ரதிக்கு மாத்திரம் தெரியும் வகையில் உயிர் பெறுவது பற்றியது.
(3) இலங்கை மலையகத்தில் பெரும்பாலும் ஆடப்படுவது.
(4) மன்னார் பகுதியில் மரபு வழிநாடகங்களுக்குள் ஒன்று.

26. நாடகத்தில் இடம் பெறும் ஆடையணி.
(1) நாடகம் சித்திரிக்கும் காலத்தை எடுத்துக்காட்டுபவையாக இருத்தல்
(2) பாத்திரங்களுக்கு ஏற்றவையாக இருத்தல்
(3) மேடை ஒளி அமைப்புக்கிணங்க ஆக்கப்பட்டிருத்தல்
(4) வசீகரமான வர்ணம் இருத்தல்

27. நல்ல நாடகம் என்பது,
(1) பார்ப்போர் கவனத்தை ஈர்ப்பதாக இருத்தல் வேண்டும்.
(2) மீண்டும் மீண்டும் பார்ப்பதற்கு தூண்டுவதாக இருத்தல் வேண்டும்.
(3) பார்ப்போரை உயர்ந்த மனநிலைக்கு இட்டுச் செல்வதாக இருத்தல் வேண்டும்.
(4) பார்ப்போருக்குப் படிப்பினைகளைப் புகட்டுவதை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

28. அன்ரன் செக்கோவ்
    (1) பிரபல ரஷ்ய நாடக ஆசிரியராவார்
    (2) தனது நாடகங்களைத் தானே தயாரித்தவர்
    (3) அவர் சிறுகதைகள் பலவற்றை எழுதினார்
    (4) அவர் ரஷ்யப் புரட்சியைச் சித்திரிக்கும் நாடகங்களை எழுதினார்.

29. நாடகத்தை ஒரு கற்கை நெறியாகப் பயில்வதால்
    (1) மாணவர் கற்றலுக்கு இடையூறு ஏற்படலாம்.
    (2) மாணவர்கள் சபைக் கூச்சம் அற்ற முறையில் நடந்து கொள்வர்.
    (3) மாணவரிடம் தன்னம்பிக்கை உணர்வு வளர்க்கப்படும்.
    (4) மாணவரின் ஆளுமை விருத்திக்கு உதவும்.

30. வானொலி நாடகத்தின் பிரதான அம்சம்
    (1) அது செவிப்புலனால் உணரப்படுவது
    (2) செவிப்புலன் வழியாகக் கேட்கப்படுவன கேட்போர் மனதில் கட்புலக் காட்சிகளாக விரியும்
    (3) இசையைப் பயன்படுத்துவதன் மூலம் உணர்ச்சி நிலைமையைப் புலப்படுத்தல்.
    (4) தொடர் நாடகங்களை அமைத்தல்.

31 இலிருந்து 40 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.

31. நவரசங்கள் அல்லாதது.
    (1) கோபம் (2) சிரிப்பு (3)அழுகை (4)தாயன்பு

32. கட்டியக்காரனின் பணி
    (1) நாடகக் கதையை அறிமுகஞ் செய்தல்
    (2) சிரிப்பூட்டுதல்
    (3) கதாநாயகனின் தோழனாக இருத்தல்
    (4) சேர்ந்து பாடுதல்

33. வலது புறத்தில் காட்டப்பட்டுள்ள படம்
    (1) மூச்சுப் பயிற்சி
    (2) தளர்வுப் பயிற்சி
    (3) உணர்ச்சி நிலைப் பயிற்சி
    (4) அரங்க விளையாட்டு



34. படத்தில் காட்டப்பட்டுள்ள வேட ஒப்பனை நாடக மரபிற்குரி யது?



(1) யட்சகானத்திற்குரியது
(2) வட மோடிக்குரியது
(3) தெருக்கூத்துக்குரியது
(4) கதகளிக்குரியது

35. வலது புறத்தில் காட்டப்பட்டுள்ள படம்



(1) கிட்சன் விளக்கு
(2) மின் விளக்கு
(3) மண்ணெண்ணெய் விளக்கு
(4) பெற்ரோமக்ஸ் விளக்கு

36. அருகிலுள்ள முத்திரை எதனைக் குறிக்கும்



(1) கண்டிய நடனம்
(2) தமிழ்நாட்டு நடனம்
(3) பரதநாட்டியம்
(4) சப்ரகமுவ நடனம்

37. வலது புறத்தில் காட்டப்பட்டுள்ளது



(1) கபுக்கி அரங்கு
(2) நோ அரங்கு
(3) புண்றகு அரங்கு
(4) மணிப்புரி அரங்கு

38. அருகில் உள்ள படத்தில் ஊமம் செய்பவர்.



(1) கொடி ஒன்றைப் பிடுங்குகிறார்
(2) படிகளில் மேலே ஏறுகிறார்
(3) கயிற்றிலிருந்து கீழே விழுகிறார்
(4) கயிற்றின் உதவியுடன் மேலே ஏறுகிறார்

39. படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு.



(1) இந்திய அரங்கு (2) கதகளி அரங்கு
(3) கிரேக்க அரங்கு (4) வட்டக் களரி

40. படத்திலே காணப்படும் நாடக் கலைஞர் பெயர்,



(1) கலைப்பேரரசு. ஏ. ரி. பொன்னுத்துரை
(2) குழந்தை. ம. சண்முகலிங்கம்
(3) கலையரசு சொர்ணலிங்கம்
(4) காரை. செ. சுந்தரம்பிள்ளை

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - II (2007)

01. (i) அரங்க விளையாட்டுக்கள் என்பவை யாவை? (3 புள்ளிகள்)
    (ii) உமக்குத் தெரிந்த இரண்டு அரங்க விளையாட்டுகளை அறிமுகம் செய்க. (6 புள்ளிகள்)
    (iii) அரங்க விளையாட்டில் ஈடுபடுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை? (6 புள்ளிகள்)

02. (i) இலங்கை கூத்து முறையில் வடமோடி என்பது எதனைக் குறிக்கின்றது? (3 புள்ளிகள்)
    (ii) அதன் ஆட்ட முறைமைகளை விளக்குக. (6 புள்ளிகள்)
    (iii) தென்மோடிக் கூத்துகள் என்பது வடமோடிக் கூத்துக்களி லிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (6 புள்ளிகள்)

03. (i) ஸ்பெசல் நாடகங்களின் பிரதான அம்சங்கள் என்பவை யாவை? (8 புள்ளிகள்)
    (ii) இந்நாடகம் இலங்கையிற் பரவிய முறைமையினை எடுத்துக் கூறுக. (4 புள்ளிகள்)
    (iii) இலங்கை நடிகர்கள் இருவரின் பெயரைத் தருக. அவர்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுக. (3 புள்ளிகள்)

04. (i) நாடக அரங்கு என்பது யாது? (5 புள்ளிகள்)
    (ii) எத்தனை வகை அரங்குகள் நம்மிடையே உண்டு? அவை யாவை? (5 புள்ளிகள்)
    (iii) அவற்றுள் ஒன்றின் சிறப்பியல்பை விளக்குக. (5 புள்ளிகள்)

05. (i) பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய நாடகங்கள் யாவை? (4 புள்ளிகள்)
    (ii) அவருடைய நாடகங்களில் இடம்பெற்ற பொதுவான பிரச் சினைகள் யாவை? (5 புள்ளிகள்)
    (iii) அந்த நாடகங்களின் பிரதான அம்சங்கள் யாவை என்பதை விளக்குக. (6 புள்ளிகள்)

06 (i) இராவணேசன் நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் யாவை? (4 புள்ளிகள்)

(ii) இராவணனை இராவணேசன் என்று சொல்வதற்கான காரணம் யாது? (5 புள்ளிகள்)

(iii) இதனை ஒரு சாதாரண நாட்டுக் கூத்து என்று கூற முடியாததற்கான காரணங்கள் யாவை? (6 புள்ளிகள்)

07. (i) மேடை நாடகத்தில் இடம் பெறும் பின்வருவோர் ஒவ்வொருவரையும் பற்றி விளக்குக. நெறியாளர், நடிகர், பார்ப்போர். (15 புள்ளிகள்)

08. (i) சிங்கள மக்களிடையே நிலவும் பாரம்பரிய நாடக வகைகளின் பெயர்களைத் தருக. (5 புள்ளிகள்)

(ii) அவற்றுள் யாதேனும் ஒன்றின் பிரதான அம்சங்களை விவரிக்க (5 புள்ளிகள்)

(iii) சிங்கள நாடக வரலாற்றில் மரபுவழி கட்டங்களுக்கு புத்தாக்கம் கொடுத்தவர் யார்? அவரது நாடகங்கள் யாவை? (5 புள்ளிகள்)

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - I (2008 New)

1. நாடகம் எனும் கலை வடிவம்
   (1) நாட்டியத்திலிருந்து (2) சடங்கிலிருந்து
   (3) பொம்மலாட்டத்திலிருந்து (4) நிழல் ஆட்டத்திலிருந்து

2. வாய்மொழியைப் பயன்படுத்தாது ஒரு நடிபாகத்தைச் சித்திரிப் பது
   (1) ஆள்மயமாதம் (2) புத்தாக்கம்
   (3) நடனம் (4) ஊமம்

3. காமன் கூத்து ஆடப்பெறும் பிரதேசம்
   (1) மன்னார் (2) மட்டக்களப்பு
   (3) மளவயகம் (4) யாழ்ப்பாணம்

4. ஸ்பெசல் நாடக மரபில் சிறந்து விளங்கிய நடிகர்
   (1) பிரான்சிஸ்ஜெனம் (2) அ.தாசீசியஸ்
   (3) எம். வி. கிருஸ்ணாழ்வார் (4) நா. சுந்தரலிங்கம்

5. மன்னார் மாவட்டத்தில் சிறப்பாக ஆற்றப்படுவது.
   (1) வடமோடி (2) வாசகப்பா
   (3) காத்தவராயன் (4) கோவலன் கூத்து

06. கட்டியகாரன் முறைமை வரும் நாடக மரபு
   (1) சிங்கள (2) மேலைநாட்டு
   (3) சமஸ்கிருத (4) தமிழ்க் கூத்து

07. முயலார் முயல்கிறார் என்னும் சிறுவர் நாடகத்தை எழுதியவர்
   (1) சி. மௌனகுரு (2) ம. சண்முகலிங்கம்
   (3) செ. சுந்தரம்பிள்ளை (4) வேலுசரவணன்

08. இருதுயரங்கள் நாடகத்தை எழுதியவர்
   (1) அ. தாசீசியஸ் (2) இ. சிவானந்தன்
   (3) இ. முருகையன் (4) நா. சுந்தரலிங்கம்

09. மகிடிக் கூத்து ஆடப்படாத இடம்
   (1) மன்னார் (2) யாழ்ப்பாணம்
   (3) வன்னி (4) மட்டக்களப்பு

10. பின்வருவனவற்றுள் மோடிமைப்படுத்தப்பட்ட நாடகம் எது?
   (1) சுந்தரம் எங்கே (2) சங்கிலி
   (3) இராவணேசன் (4) உடையார் மிடுக்கு

11. சண்முகலிங்கத்தின் எந்தையும் நாடகம் எவ்வகையைச் சார்ந்தது
    (1) யதார்த்த நாடகம் (2) சமஸ்கிருத நாடகம்
    (3) அர்த்த நாடகம் (4) யதார்த்த சாரா நாடகம்

12. கோலம் எனும் நாடக வகை
    (1) வேட முகங்களைக் கொண்டது
    (2) உயர்ந்த மேடையில் ஆடப்படுவது
    (3) கதையம்சம் இல்லாதது
    (4) யதார்த்தம் சாரா நாடகம்

13. ஆடை அணிகள், காட்சிகள்
    (1) ஆங்கிக (2) சாத்துவிக
    (3) வாச்சிக (4) ஆகார்ய
    அபிநயத்துள் வருவது,

14. நாட்டுக் கூத்து மரபில் வட்டம் போடுவது என்பது
    (1) கோபத்தைக் குறிப்பது
    (2) ஒருவருக்கொருவர் சண்டைபிடிப்பதைக் குறிப்பது
    (3) தூரம் நடந்து செல்வது என்பதைக் குறிப்பது,
    (4) பக்கப்பாட்டுக்கான நேரத்தைக் குறிப்பது

15. சங்கரதாஸ் சுவாமிகள்
    (1) கூத்துக் கலைஞன் (2) நவீன நாடகக் கலைஞன்
    (3) சினிமாக் கலைஞன் (4) இசை நாடகக் கலைஞன்

16. அரங்கில் நடைபெறும் ஒரு விடயத்தைக் குறிப்பாகக் காட்டப் பயன்படும் ஒளி வகை
    (1) பெருக்கொளி (2) வர்ணச் சில்லு
    (3) பொட்டொளி (4) கரை ஒளி

17. மேடைக்கான ஒளி அமைப்பின் தேவை
    (1) நாடகக் கதையின் காலத்தைக் குறிக்கும்
    (2) நாடக மோடிக்கு அழுத்தம் கொடுக்கும்
    (3) நடக்கும் காட்சியின் காலத்தைக் குறிக்கும்
    (4) நாடகம் நடக்கும் ஊரைக் குறிக்கும்

18. அரங்கிற்கான இசையின் நோக்கம் ஒன்று
    (1) நாடகக் காட்சியின் காலத்தைக் குறித்தல்
    (2) நாடக உணர்ச்சிக் கட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்தல்
    (3) நாடகப் பாடலுக்கு மொட்டுக் கொடுத்தல்
    (4) இசையாளரின் திறமையைக் காட்டல்

19. நடிகர் தனது பேச்சுத் திறனை வளர்க்க உதவும் பயிற்சி ஒன்று
    (1) குரல் பயிற்சி (2) உடல் தளர்தற் பயிற்சி
    (3) ஒத்திசைவுப் பயிற்சி (4)உணர்வுப் பயிற்சி

20. நாடகம் ஒன்று தயாரிக்கப்படுவதற்கு நிதி வழங்குபவர் என்பெயர் கொண்டு அழைக்கப்படுவர்?
    (1) நெறியாளர் (2) மேடை முகாமையாளர்
    (3) தயாரிப்பாளர் (4) எடுத்துரைஞர்

21. தெருக்கூத்து இந்தியாவில் ஆடப்படும் பிரதேசம்
    (1) கேரளா (2) ஆந்திரா
    (3) கர்நாடகா (4) எடுத்துரைஞர்

22. பத்தினித் தெய்வத்துடன் தொடர்புடைய சிங்கள சடங்கு எது?
    (1) கோலம் (2) சொக்கறி
    (3) தொவில் (4) நாடகம

23. 'மனமே' எனும் நாடகத்தை எழுதியவர்
    (1) பராக்கிரம நிரியல்ல (2) தயானந்த குணவர்த்தன
    (3) எதிர்வீர சரச்சந்திர (4) நிகால் கலப்பத்தி

24. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலை வடிவம் அல்லாதது
    (1) பலே (2) சிற்பம்
    (3) ஒப்பறோ (4) மேற்கூறிய எல்லாம்

25. நடிகர் வேடமுகத்தை அணிவதன் மூலம்
    (1) தன்னை உருமாற்றுகிறார்
    (2) பாத்திரத்தைச் சுட்டுகிறார்
    (3) வகிபாகத்திற்கு அழுத்தம் கொடுக்கிறார்
    (4) மேற்கூறிய எல்லாம்

26. நடிகருக்கு அத்தியாவசியமற்றது
    (1) அழகான உடம்பு (2) மேடைக்கேற்ற குரல்
    (3) புத்தாக்க நடிப்பு (4) நெகிழ்வான உடம்பு

27. நடிப்பிற்கான வெளி எப்பொழுதும்
    (1) வட்டமாக இருத்தல் வேண்டும்
    (2) உயர்ந்ததாக இருத்தல் வேண்டும்
    (3) காட்சி அமைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்
    (4) பார்ப்போர் பார்க்கும் வகையில் இருத்தல் வேண்டும்

28. வரவுப் பாட்டு என்பது
   (1) பாத்திரம் தானே பாடுவது
   (2) சேவகர் பாடுவது
   (3) அண்ணாவியார் பாடுவது
   (4) பக்கப்பாட்டுக்காரர் பாடுவது

29. நாடக அளிக்கைக்கு மிக அத்தியாவசியமானது
   (1) ஒளி   (2) இசை
   (3) காட்சி   (4) நடிகர்

30. லங்கா சுபோத விபாச சபையை நிறுவியவர்
   (1) க. கணபதிப்பிள்ளை   (2) பம்மல் சம்பந்தமுதலியார்
   (3) சங்கரதாஸ் சுவாமிகள்   (4) கலையரசு சொர்ணலிங்கம்

31. படத்தில் இடம் பெறுபவர்



   (1) இ. முருகையன்
   (2) ம. நண்முகலிங்கம்
   (3) நா. சுந்தரலிங்கம்
   (4) க. சிதம்பரநாதன்

32. படம் குறிக்கும் காட்சி



   (1) மேடை நாடகம்
   (2) தெருவெளி நாடகம்
   (3) மரபு வழிக் கூத்து
   (4) இசை நாடகம்

33. படத்தில் உள்ள வேட முகம்



   (1) கிரேக்கத்திற்குரியது
   (2) கூத்துக்குரியது
   (3) இசை நாடகத்திற்குரியது
   (4) சீன மரபிற்குரியது

34. படத்தில் உள்ள அரங்கு



   (1) சீன அரங்கு
   (2) கொரிய அரங்கு
   (3) யப்பானிய அரங்கு
   (4) இந்திய அரங்கு

35. படத்தில் உள்ள மிகச் சிறந்த அரங்கக் கோட்பாட்டாளர்



(1) பிறெக்ற்
(2) ஸ்ரனிலவஸ்கி
(3) மேயர் கோல்ட்
(4) அரிஸ்டோட்டல்

36. படத்திற் உள்ள தோற்கருவி



(1) மிருதங்கம்
(2) டோல்கி
(3) மத்தளம்
(4) தவில்

37. படத்தில் காணப்படும் சிறந்த நெறியாளர்




(1) நா. சுந்தரலிங்கம்
(2) இ. சிவானந்தன்
(3) ம. சண்முகலிங்கம்
(4) அ. தாசீசியஸ்

38. படத்தில் காணப்பெரும் நாடக விமர்சகர்



(1) ஏ. ஜே. கனகரட்னா
(2) கே. எஸ். சிவகுமாரன்
(3) ஏ. ரி. பொன்னுத்துரை
(4) பா. அகிலன்

39. படத்திலிடம் பெறும் ஒளி விளக்கின் பெயர்



(1) பரப்பொளி
(2) பொட்டொளி
(3) வர்ணச்சில்லு
(4) மங்கலாக்கி

40. படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம் இடம்பெறும் அரங்கு



(1) சிங்கள அரங்கு
(2) தமிழ் அரங்கு
(3) சீன அரங்கு
(4) இந்திய அரங்கு

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - II (2008 New)

01. சுருக்கமான விடை எழுதுக.
    (i) தமிழ் பாரம்பரிய நாடக வடிவத்தைக் குறிக்கும் பெயர் யாது?
    (ii) பார்சி அரங்கு எனப்படுவது யாது?
    (iii) தமிழ் நாட்டில் பார்சி நாடக மரபிற்கு முன் நிலவிய நாடக வகைகள் இரண்டு தருக?
    (iv) சங்கரதாஸ் சுவாமிகளின் பெயர் எந்த நாடக வகையோடு இணை த்துப் பேசப்படுகிறது?
    (v) தெருக்கூத்து என்பது யாது?
    (vi) எந்தையும் தாயும் நாடகத்தில் வரும் சங்கரப்பிள்ளையின் வயது எத்தனை?
    (vii) மழை நாடகத்தின் அடிப்படைக் கருத்து யாது?
    (viii)ஒளி விதானிப்பில் மங்கலாக்கி (Dimmer) என்பது யாது?
    (ix) மகிடிக்கூத்து இடம் பெறும் பிரதேசங்கள் இரண்டு தருக?
    (x) ஒரு நடிகனின் சிறப்பை எவ்வாறு மதிப்பிடலாம்?

02. (i) நாடகக் கலைக்கு சிறப்பைக் கொடுக்கும் அதன் பண்புகள் யாவை? (6 புள்ளிகள்)
    (ii) நாடகக் கலையில் பார்ப்போருக்கு உரிய முக்கியத்துவம் யாது? (6 புள்ளிகள்)

03. இந்துக் கோயில்களில் நடைபெறும் வேட்டைத் திருவிழா அல்லது கிறிஸ்தவ தேவாலயங்களில் நிகழ்த்திக் காட்டப்படும் திருப்பாடு களின் காட்சி (பாஸ்கா நாடகத்தன்மையை முழுதாகக் கொண்ட ச டங்காகும்.
    (i) வேட்டைத் திருவிழாவில் திருப்பாடுகளின் காட்சியில் வரும் பாத்திரங்கள் யாவை? (4 புள்ளிகள்)
    (ii) வேட்டைத் திருவிழாச் சடங்கு திருப்பாடுகளின் காட்சி சடங்கு உணர்த்தும் பிரதான பொருள் யாது? (8 புள்ளிகள்)

04. (i) அபிநயம் என்பது யாது? (2 புள்ளிகள்)
    (ii) அது எத்தனை வகைப்படும் (2 புள்ளிகள்)
    (iii) அவை யாவை? (4 புள்ளிகள்)
    (iv) அவை நாடகத்தின் முழுமைக்கு எவ்வாறு உதவுகின்றன? (4 புள்ளிகள்)

05. (i) மழை எந்தையும் தாயும் நாடகத்திற்கான பிரதான பின்புலக் காட்சி எவ்வாறு அமையும்? (3 புள்ளிகள்)

(ii) எந்தையும் தாயும் நாடகத்தின் இறுதிக் காட்சியில் இடம்பெற வேண்டிய இசைப்பின் புலத்தினை விளக்குக. (3 புள்ளிகள்)

(iii) அதில் என்ன என்ன வாத்தியம் பயன்படுத்துவீர்? (3 புள்ளிகள்)

(iv) அவற்றால் எத்தகைய உணர்வு ஏற்படுத்தப்படும்? (3 புள்ளிகள்)

06. நாடகத்தின் கட்டுருவாக்கத்திற்கு பாத்திரங்களே அடிப்படை யாகும். பாத்திரங்களின் அசைவியக்கம் மூலமே நாடகம் கட்டுருவாக் கப்படுகிறது என்பதை நா. சுந்தரலிங்கத்தின் விழிப்பு நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (12 புள்ளிகள்)

07. தயாரிப்பாளரினதும் நெறியாளர்களினதும் பணிகள் வேறு என்பர்

(i) தயாரிப்பாளர் என்பவர் யார்? (3 புள்ளிகள்)

(ii) நெறியாளர் என்பவர் யார்? (3 புள்ளிகள்)

(iii) தயாரிப்பாளருக்கும் நெறியாளருக்கும் இருக்க வேண்டிய வேறுபாடு களை விளக்குக. (6 புள்ளிகள்)

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - I (2008 Old)

01. நாடகக் கலையின் பிரதான நோக்கம்
    (1) படித்துச் சுவைப்பதற்கு
    (2) மேடையில் சம்பவங்களைச் செய்து காட்ட
    (3) பார்ப்பவருக்கு அறிவு, ஞானம் ஏற்படுத்த
    (4) பார்ப்பவரிடையே ரச உணர்வை ஏற்படுத்த

02. மொழியுடன் தொடர்பான அரங்க விளையாட்டு
    (1) கரடியும் கிராம மக்களும் (2) குருட்டு ஆட்டோ
    (3) கோழி கோட்டான் (4) பொன் முட்டை

03. காமன் கூத்து ஆடப்பெறும் பிரதேசம்
    (1) வடமோடி, தென்மோடி
    (2) நாடக வழக்கு, உலகியல் வழக்கு
    (3) வடபாங்கு, தென்பாங்கு
    (4) நாட்டிய தர்மி, லோக தர்மி

04. மகிடிக் கூத்து பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம்
    (1) மன்னார் (2) கொழும்பு
    (3) யாழ்ப்பாணம் (4) மட்டக்களப்பு

05. துறவி நாடகத்தின் மூல நாடகாசிரியர்
    (1) ரவீந்திரநாத் தாகூர் (2) சண்முகலிங்கம்
    (3) விபுலானந்தர் (4) சுந்தரலிங்கம்

06. விவாகப் பேச்சு எனப்படும் மூல நாடகத்தை எழுதியவர்
    (1) அன்ரன் செக்கோவ் (2) இப்சன்
    (3) இளங்கோ (4) சரச்சந்திரா

07. பின்வரும் கூற்று இடம் பெறும் நாடகம்

    ''பேசி முறுக்குகின்றாள்
    பெருமைகளை உந்தன் வாயால்
    கூடாமல் கூறுகின்றாய்
    குரங்குகளின் துணை கொண்டு...''

    (1) இராவணேசன் (2) கர்ணன்போர்
    (3) வாலிவதை (4) நொண்டி

08. சுந்தரம் எங்கே நாடகத்தில் இடம் பெறும் பாத்திரங்களிலொன்று
(1) மண்டோதரி (2) ஐயாத்துரை
(3) அருணாசலம் (4) பொதுவர்

09. பேராசிரியர் மௌனகுருவால் எழுதப்படாத நாடகம்
(1) சங்காரம் (2) சக்தி பிறக்குது
(3) கோடை (4) தப்பி வந்த தாடி ஆடு

10. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் எது தழுவல் நாடகம்?
(1) சுந்தரம் எங்கே (2) தவறான எண்ணம்
(3) உடையார் மிடுக்கு (4) மாணிக்கமாலை

11. நாட்டார் கூத்து மரபைச் சாராத நாடகம்
(1) காத்தவராயன் கூத்து (2) வடமோடி
(3) மகிடி (4) ஸ்பெசல் நாடகம்

12. பாரம்பரிய சிங்கள நாடக மரபுக்குள் வராதது
(1) கோலம் (2) காமன்கூத்து
(3) சொக்கரி (4) நாடகம

13. கூத்துமரபில் அண்ணாவியார் போன்று நாடகம மரபில்
(1) பொத்தேகுரா
(2) கொரணகாரன்
(3) கறலியகாரன்
(4) வெதமாத்தையா

14. விலாசம் எனும் நாடக வகை
(1) தனியே ஆட்டத்திற்குரியது
(2) தனியே பாட்டுக்குரியது
(3) ஆட்டமும் பாட்டும் கொண்டது
(4) வசனங்களைக் கொண்டது

15. ஆற்றுகை எனப்படும் அரங்க இதழை வெளியிடும் நிறுவனம்
(1) நாடக அரங்கக் கல்லூரி
(2) அரங்க செயற்பாட்டுக் குழு
(3) திருமறைக் கலாமன்றம்
(4) யாழ் பல்கலைக்கழகம்

16. நாடக நெறியாளரின் பிரதான பணிகளில் ஒன்று
   (1) தேவையான இடத்தைத் தெரிவு செய்தல்
   (2) அளிக்கையின்போது வசனங்களை எடுத்துரைதல்
   (3) நடிகரைத் தெரிவு செய்தல்
   (4) விற்பனைச் சீட்டுகளை விநியோகம் செய்தல்

17. பார்ப்போர் பெரும்பாலும் நாடகம் பார்க்கச் செல்வது
   (1) அறிவைப்பெற (2) பிரச்சினைக்குத் தீர்வு காண
   (3) மகிழ்வுற (4) ஓய்வு நேரத்தைக் களிக்க

18. நாடக விமர்சனத்தின் உண்மையான பயன்பாடு
   (1) நாடக ஆக்கத்திலுள்ள குறைபாடுகளை நீக்குதல்
   (2) நாடக ஆக்குனரை ஊக்குவிப்பது
   (3) நடிகர்களில் குற்றங்காண
   (4) பார்வையாளர் நாடகத்தை விளங்கிக் கொள்ள

19. நால்வகை அபிநயம் பற்றி முதன்முதலில் கூறும் நூல்
   (1) தொல்காப்பியம் (2) சிலப்பதிகாரம்
   (3) நாட்டியசாஸ்திரம் (4) தசரூபகம்

20. பிறிதோர் ஆள் ஆவது என்பது
   (1) நடிப்பு (2) பாத்திரச் சித்திரிப்பு
   (3) பாத்திரமாக மாறுதல் (4) மேற்கூறிய எதுவுமல்ல

21. பின்வருவோரில் நாடக ஆசிரியர் அல்லாதவர்
   (1) க. கணபதிப்பிள்ளை (2) நா. சுந்தரலிங்கம்
   (3) கலையரசு சொர்ணலிங்கம் (4) இ. முருகையன்

22. பாடலே பிரதானமாகும் ஆற்றுகை கலைவடிவம்
   (1) ஒப்பேரு (2) பலே (3) நடனம் (4) ஊமம்

23. பின்வருவனவற்றுள் நா.சுந்தரலிங்கத்தால் எழுதப்பெற்ற நாடகம்
   (1) மழை (2) அபசுரம் (3) சரிபாதி (4) சங்கிலி

24. பின்வருவனவற்றுள்ளே கிறிஸ்தவம் சாரா நாடக வடிவம்
   (1) ஞானசௌந்தரி (2) எஸ்தாக்கியர்
   (3) கண்டியரசன் (4) என்ரிக் எம்பரதோர்

25. சுந்தரம் எங்கே நாடகத்தில் வரும் சுந்தரம் அருணாசலத்தின்
   (1) மகன் (2) மருமகன் (3)தம்பி (4) தகப்பன்

26. பேராசிரியர் வித்தியானந்தனால் தயாரிக்கப் பெறாத நாடகம்
    (1) சங்காரம் (2)வாலிவதை
    (3) இராவணேசன் (4)கர்ணன்போர்


27. சூரன் போர் என்பது
    (1) ஒரு மேடை நாடகம்
    (2) நரகாசுரன் முருகன் போரைச் சித்திரிப்பது
    (3) கந்தசஷ்டி பற்றிய சடங்கு நாடகம்
    (4) நேர்த்திக் கடனுக்காக ஆடப்படுவது

28. நடிகமணி வைரமுத்துவின் நாடக சபையின் பெயர்
    (1) சுகிர்த விலாச சபா (2) சுகுண விலாச சபா
    (3) சரஸ்வதி விலாச சபா (4) வசந்தகான சபா

29. வார்த்தைகளிற்கு அழுத்தம் கொடுக்கும் அபிநயம்
    (1) ஆங்கிகா (2) ஆகாகிய
    (3) வாச்சிகா (4) சாத்வீக

30. ஒரு நாடகத்தின் ஒப்பனையின் பயன்பாடு
    (1) நடிகர் முகத்தை அழகாக வைத்திருத்தல்
    (2) பாத்திரங்களின் கவர்ச்சியை எடுத்துக் காட்டுதல்
    (3) பாத்திரங்களின் உணர்ச்சியை முனைப்புறுத்திக் காட்டுதல்
    (4) நன்கு பேசி நடிக்க உதவுதல்

31. படத்தில் உள்ளவர் இசைநாடக நடிகர் ஒருவராவர். அவர்



    (1) கிருஸ்ணாழ்வார்
    (2) இணுவில் நாகலிங்கம்
    (3) செல்வம்
    (4) வி. வி. வைரமுத்து

32. படம் காட்டும் அரங்கம் குறிப்பது



    (1) கிரேக்க அரங்கு
    (2) ரோம அரங்கு
    (3) எலிசபெத் அரங்கு
    (4) சீன அரங்கு

33. படத்தில் காட்டப்பட்டுள்ள நடிகை



    (1) டி. கே. பட்டம்மாள்
    (2) கே.வி. சுந்தராம்பாள்
    (3) பாலாமணி அம்மையார்
    (4) எம். எஸ். சுப்புலட்சுமி

34. படத்தில் காணப்பெறும் உலக பிரசித்திபெற்ற நாடகராசிரியர்



(1) பேனாட்சா (2) சேக்ஸ்பியர்

(3) பிறெக்ற் (4) இப்சன்

35. படத்தில் காணப்பெறும் ஈழத்து நாடகாசிரியர்



(1) சி. மௌனகுரு

(2) இ. முருகையர்

(3) இ. சிவானந்தன்

(4) நா. சுந்தரலிங்கம்

36. படத்தில் காணப்பெறும் இந்திய நாடகாசிரியர்



(1) பாதல் சர்க்கார்

(2) இந்திரா பார்த்தசாரதி

(3) வேலு சரவணன்

(4) ரவீந்திரநாத்தாகூர்

37. படத்தில் காணப்பெறும் நடிகர் குறிக்கும் நாடகம்



(1) தெருக்கூத்து

(2) கதகளி

(3) மணிப்புரி

(4) ஒடிசி

38. படத்தில் காணப்பெறும் நாடகாசிரியர்



(1) ஸ்ரனிலவஸ்கி

(2) சேணிஸ்லவஸ்கி

(3) அன்ரன் செக்கோவ்

(4) மேயர் கோல்ட்

39. படத்தில் காணப்பெறும் சிறந்த ஒரு நெறியாளர்



(1) நா. சுந்தரலிங்கம்

(2) சி. மௌனகுரு

(3) க. சிதம்பரநாதன்

(4) அ. தாசீசியஸ்

40. படத்தில் காணப்பெறும் சிறந்த கூத்துக் கலைஞர்



(1) புரன்ச கண்ணப்பதம்பிரான்

(2) புரன்ச நடேசதம்பிரான்

(3) மட்டு நாகமணிப்போடியார்

(4) யாழ் பூந்தாள் யோசேப்பு

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - II (2008 Old)

01. (i) நாடகமும் அரங்கியலும் பற்றிப் படிப்பதால் மாணவர் ஒருவருக்குக் கிட்டும் நன்மைகள் யாவை? (7 புள்ளிகள்)

(ii) ஏனைய கலைகளுக்கு இல்லாத நாடகக் கலைகளுக்கு மாத்திரமே உள்ள சிறப்பியல்புகள் யாவை? (8 புள்ளிகள்)

02. (i) ஒருவர் திறம்பட நடிப்பதற்கு வேண்டிய அத்தியாவசிய பயிற்சிகள் யாவை? (6 புள்ளிகள்)

(ii) அவை நடிப்புக்கு எவ்வாறு உதவுகின்றன? (6 புள்ளிகள்)

03. (i) எழுத்துரு என்பது யாது? (6 புள்ளிகள்)

(ii) அதனை நாடகம் எனக் கொள்ளது எழுத்துரு என்று வரையறுத்துக் கூறுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக (6 புள்ளிகள்)

04. (i) சடங்கிலிருந்தே நாடகம் தோன்றியது என்பர் சடங்கிலிருந்து +நாடகக் கலை உருவாகும் பிரதான படிநிலைகளைக் குறிப்பிடுக (15 புள்ளிகள்)

05. (i) நாடகத்தின் கட்டுருவாக்கத்திற்குப் பாத்திரங்களே அடிப்படையாகும். பாத்திரங்களின் அசைவியக்கம் மூலமே நாடகம் கட்டுருவாக்கப்படுகிறது என்பதை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் சுந்தரம் எங்கே என்னும் நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

06. நாடகங்களைக் காட்சிகளாகப் பிரித்துக் காட்டுவது வழக்கம்

(i) காட்சிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? (3 புள்ளிகள்)

(ii) இவற்றின் பயன்பாடுகள் யாவை? (6 புள்ளிகள்)

(iii) இவை நாடகத்தின் முழுமைக்கு எவ்வாறு உதவுகின்றன? (6 புள்ளிகள்)

07. (i) துறவி நாடகத்தில் துறவி பாத்திரம் கவர்ச்சிகரமானதாக அமைவதற்கான காரணங்கள் எழுதுக. (7 புள்ளிகள்)

(ii) இப்பாத்திரத்தை நீர் ஏற்று நடித்தால் எத்தகைய வேட உடைகளை அணிவீரெனவும் எத்தகைய ஒப்பனைகளைச் செய்வீரெனவும் குறிப்பிடுக. (8 புள்ளிகள்)

08\. (i) சிங்கள நாடக மரபில் வரும் கோலம நாடகத்தின் பிரதான பண்பு களைத் தருக. (7 புள்ளிகள்)

(ii) சிங்களப் பாரம்பரியத்தில் இடம் பெறும் சடங்கு ஆட்டங்கள் நான் கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) ஏதாவது ஒரு சடங்கு ஆட்டம் பற்றி விவரிக்குக.(4 புள்ளிகள்)

# நாடகமும் அரங்கியலும் - பகுதி - I (2009)

1) கூத்து எனும் எண்ணக்கருவால் விளங்கிக்கொள்ளப்படுவது
1. பாடல் ஆகும் 2. நாடகம் ஆகும்
3. ஆட்டம் ஆகும் 4. இசை ஆகும்

2) ஊமம் நிகழ்த்தும் நடிகர் ஒருவர் பெற்றுக்கொள்ள வேண்டியது
1. குரற் பயிற்சியாகும் 2. பேச்சுப் பயிற்சியாகும்
3. உடற்தளர்வுப் பயிற்சியாகும் 4. வாசிப்பு பயிற்சியாகும்

3) கருத்தூன்றல் பயிற்சிக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பெறும் அரங்க விளையாட்டு
1. நண்டு இறால் மீன் 2. ஆடும் வீடும்
3. நாரை நாராய் 4. கரடியும் கிராம மக்களும்

4) கோவலன் கூத்து பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம்
1. யாழ்ப்பாணம் 2. மன்னார்
3. முல்லைத்தீவு 4. மட்டக்களப்பு

5) சூரன் போருடன் தொடர்புடைய தெய்வம் முருகன் ஆவார். கம்சன் போருடன் தொடர்புடைய தெய்வம்
1. பிள்ளையார் 2. சிவன்
3. மாரியம்மன் 4. விஷ்ணு

6) உடக்குப்பாஸ் எனும் நாடக நிலைச்சடங்கு பெரும்பாலும் மன்னாரில்
1. வங்காலைப் பிரதேசத்திலேயே ஆடப்படுகிறது.
2. முருங்கன் பிரதேசத்திலேயே ஆடப்படுகிறது.
3. பேசாலை பிரதேசத்திலேயே ஆடப்படுகிறது.
4. நானாட்டான் பிரதேசத்திலேயே ஆடப்படுகிறது.

7) சடங்குகள் செய்வதன் நோக்கங்களிலொன்று அல்லாதது
1. நம்பிக்கை
2. நற்பலன்
3. வேண்டுதல்
4. இயற்கை அனர்த்தங்களிலிருந்து காத்தல்

8) பின்வருவோரில் நாடக ஆசிரியர் அல்லாத ஒருவர்
1. நா. சுந்தரலிங்கம் 2. இ. முருகையன்
3. பிரான்சிஸ் ஜெனம் 4. சி. மௌனகுரு

9) சிங்களப் பாரம்பரிய அரங்கில் பேயோட்டும் சடங்குடன் தொடர்புடைய அளிக்கை வடிவம்

1. சன்னியக்கும
2. நுர்த்தி
3. நாடகம்
4. சொக்கறி

10) பவளக்கொடி நாடகத்தை எழுதியவர்

1. பாலாமணி அம்மையார்
2. சங்கரதாஸ் சுவாமிகள்
3. மனோகர்
4. கன்னையா நாயுடு

11) கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் எழுதப்பட்ட நாடகம்

1. தண்ணீர் தண்ணீர்
2. ஓர் இரவு
3. தூக்குமேடை
4. கருஞ்சுழி

12) தமிழ் நாட்டில் சிறுவர் அரங்கிற்கென முத்திரை பதித்துக் கொண்டவர்

1. ந. முத்துசாமி
2. வெளி. ரெங்கராயன்
3. வேலு சரவணன்
4. ஏ. ஜே. குணசேகரன்

13) ஈழத்து அரங்க வளர்ச்சிப் போக்கில் சம்பந்தப்பட்ட அரங்கவியலாளர்களின் சரியான ஒழுங்கைக் குறிப்பது பின்வருவனவற்றுள் எது?

1. வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை, மௌனகுரு, சிதம்பரநாதன்
2. கணபதிப்பிள்ளை, மௌனகுரு, வித்தியானந்தன், சிதம்பரநாதன்
3. கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், மௌனகுரு, சிதம்பரநாதன்
4. வித்தியானந்தன், மௌனகுரு, கணபதிப்பிள்ளை, சிதம்பரநாதன்

14) பின்வரும் உரையாடலைக் கவனத்திற்கொண்டு இவ்வினாவிற்கு விடையளிக்குக.

A- மெய்யே அப்பா, மகன் கடைசியா அனுப்பின காயிதம் எங்கை? இதிலதானே வைச்சனான்

B- இங்க இருக்கு, நான் ராத்திரி ஒருக்கா எடுத்து வாசிச்சனான்!

A- வாசிச்சனீங்களோ, கள்ளன் எனக்குத் தெரியாமல் தனிய வைச்சு வாசிச்சிருக்கிறீங்கள் என்ன?

இங்கு A, B எனக் குறிப்பிடப்படும் பாத்திரங்கள்

1. ஐயாத்துரை, கண்ணன்
2. கண்ணன், வசந்தி
3. செல்வரெட்ணம்,மகேஸ்வரி
4. மகேஸ்வரி, செல்வரெட்டணம்

15) விழிப்பு நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களில் இரண்டு

1. அருணாசலம், சியாமளா 2. மாசிலன், மன்னவன்
3. சந்திரன், செல்வி 4. பொதுவர், தியாகர்

16) மழை நாடகத்தின் பிரதான கரு

1. பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு தனித்திருக்கும் பெற்றோர்
2. ஒற்றுமையாக இயங்குவதன் மூலம் எதையும் சாதிக்கலாம்
3. வேலையில்லாப் போராட்டம்
4. வாழ்க்கையின் புரிந்துணர்வற்ற தன்மை

17) நாடகத் தயாரிப்பின்போது விளம்பரம் செய்தல், விற்பனைச் சீட்டுக் களை விநியோகம் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்

1. நடிகர் 2. நெறியாளர்
3. தயாரிப்பாளர் 4. மேடை, முகாமையாளர்

18) இந்தியாவின் தெருக்கூத்து எனப்படும் நாடக வடிவம் பெரும்பாலும் நிகழ்த்திக் காட்டப்படும் மாநிலம்

1. கேரளா 2. ஆந்திரா
3. தமிழ்நாடு 4. மகாராஷ்டிரா

19) நடிகரின் உணர்ச்சித் திரிபைக் காட்டும் பாவம் வெளிப்படுவது

1. ஆங்கிக அபிநயத்தில் 2. சாத்விக அபிநயத்தில்
3. ஆகார்ய அபிநயத்தில் 4. வாசிக அபிநயத்தில்

20) பரதமுனிவர் அடிப்படையான ரசங்கள் எனக் கொண்ட எண்ணிக்கை

1. 7 2. 8 3. 9 4. 10

21) பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைவடிவம் எனக் கொள்ள முடியாதது

1. ஒளிப்படம் 2. நடனம் 3. இசை 4. நாடகம்

22) வட்டமாக மாணவர்களை நிற்க அல்லது இருக்க விட்டு செய்ய முடியாத அரங்க விளையாட்டு

1. தலைவரைக் கண்டுபிடித்தல் 2. பஸ் விளையாட்டு
3. ஆடும் வீடும் 4. நண்டு, இறால், மீன்

23) மூச்சுப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி என்பன நடிகரின்
1. உடல் தளர்நிலைக்கு உதவுகின்றன
2. குரல் நெகிழ்வு நிலைக்கு உதவுகின்றன
3. அவதானத் திறனுக்கு உதவுகின்றன
# நாடகமும் அரங்கியலும் II
# புள்ளி வழங்கும் திட்டம்

1. (i) அரங்கிற்கு நடிகர்களைத் தயார்ப்படுத்துவதற்காக விளையாடப்படும் விளையாட்டுக்கள் அரங்க விளையாட்டுக்கள் எனப்படுகின்றன. அவை உடல் உளச் சமநிலையைத் தோற்றுவிப்பனவாகவும், மனத் தடைகளை அகற்றுவனவாகவும் உறவினை ஏற்படுத்துவன வாகவும், மகிழ்வளிப்பனவாகவும் விளங்குகின்றன. மேலும் உடல், உள, குரல் பயிற்சிகளை வழங்குகின்றன.

(ii) யாதாயினும் இரண்டு அரங்க விளையாட்டுக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு ஆடப்படுகின்றன என்பதையும் சுட்டுதல் வேண்டும்.

உதாரணம்: ஆடும் வீடும், பழக்கலவை, கோழி கோட்டான், நாரை நாராய், கரடியும் கிராம மக்களும், இறால் நண்டு மீன், தலைவரைக் கண்டுபிடித்தல், பொன்முட்டை.

(iii) மகிழ்ச்சியை ஏற்படுத்தும்
கருத்தூன்றலாக அமையும்
வெட்கம், பயம் போன்ற மனத்தடைகளை அகற்றும்
உறவினை ஏற்படுத்தும்
சிந்தனை விரிவைத் தரும்
உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்
கூட்டுணர்வைக் கொண்டுவரும்
சுமுகமான பங்கேற்றலுக்கு உதவும்
தன்னை உணர்ந்து கொள்ள உதவும்.

2. (i) தமிழ் நாட்டின் வடபகுதியில் இருந்து வந்தது வடமோடி எனப்படும். புராண இதிகாசக் கதைக் கருவைக் கொண்டதும் போர் செய்து வெற்றி பெறுவதைக் கதையாகக் கொண்டதும் கோபம், வீரம், அழுகை முதலிய சுவைகள் விரவி வருவதும் வடமோடியாகும். வட்டக்களரியில் வடக்குத் தெற்காக ஆடப்படுவதும் தனக்கென தனித்துவமான ஆடல்முறையினையும், தாளக்கட்டுக்களையும் உடை ஒப்பனை முறையையும் வடமோடி கொண்டுள்ளது.

(ii) நுணுக்கம் குறைந்த விரைவான விறுவிறுப்பான ஆட்டம். தித்தித்தா

என்ற அடிப்படைத் தாளக் கட்டுடன் முழுப்பாதமும் நிலத்தில் படும்படி உரஞ்சி இழுத்து ஆடப்படுவது. வரவுத் தாளம் தீர்க்கப் பட்டதும் வரவு ஆட்டமும் முடியும். அரசன், அரசி, வீரர், தேர் ஏற்றம் போன்றவற்றிற்கு தனித்தனி ஆட்டங்கள்.

வீசாணம், எட்டு, பொடியடி, குத்து, நாலடி, உலா என்பன வடமோடி யின் பிரதான ஆட்டக் கோலமாகும்.

| (iii) வடமோடி | தென் மோடி |
|---|---|
| 1. உதாரணம்: இராம நாடகம் இராவணேசன் கர்ணன் போர் | உதாரணம்: அலங்காரரூபன், அல்லிகதை |
| 2. போர் சம்பந்தமான கதைகள் | காதல் சம்பந்தமான கதைகள் |
| 3. துரித ஆட்டம் | நுணுக்கமான ஆட்டம் |
| 4. சுவைகள் வீரம், அழுகை, கோபம் | காதல், நகை, வியப்பு |
| 5. வடக்கு தெற்காக ஆடுவது | சுற்றிவர ஆடுவது |
| 6. பாத்திர அறிமுகம் பாத்திரமே செய்யும் | அண்ணாவியார் செய்வார் |
| 7. பாரமான ஆடைகள் | பாரம் குறைந்த பட்டாடைகள் |

3. (i) பாடல் மூலமான சித்திரிப்பைக் கொண்டது.

மூன்று பக்கமும் அடைக்கப்பட்டு முன்திரை பின்திரை பக்கத் திரைகளுடன் ஆடப்பபட்டது.

தொழில் முறை நடிகர்களால் ஆற்றப்பட்டது.

நாடகக் கம்பனிகள் மூலம் நிகழ்த்தப்பட்டது.

காசுக்கு நாடகம் போடப்பட்டது

அண்ணாவியார் பிற்பாட்டுக்காரர் மேடையில் நின்ற வண்ண மிருப்பர்.

(ii) மெட்டுக்கள் குறிப்பிடப்பட்டு பாடல்கள் அறிமுகம் செய்யப் பட்டன.

(iii) மூன்று கால கட்டங்களாக பரவிய முறை கூறப்படல் வேண்டும்.

முதலாம் கட்டம் 1919க்கு முன்

இந்தியக் கலைஞர்கள் மாத்திரம் நாடகமாடினர்.

*இரண்டாவது கட்டம் 1919 - 1939*

இந்தியகலைஞரும் ஈழத்துக் கலைஞரும் இணைந்து நாடகமாடியமை,

இது ஈழத்து இசை நாடக வரலாற்றின் பொற்காலம் எனப்பட்டமை.
இந்திய கலைஞர்களால் இங்கு வர இயலாமை இருந்தநிலை.
*மூன்றாவது கட்டம் 1939க்குப் பின்*

பெரும்பாலும் இந்தியக் கலைஞர்களை சினிமா ஈர்த்தமையும் அதனால் ஈழத்தவரே இசைநாடகங்களை நிகழ்த்தியமை.

தொழில் முறை நாடகக் குழுக்களின் உருவாக்கமும் அவை இசை நாடகத்தை எடுத்துக் கொள்ளாமையும். யாழ்ப்பாணம் கொழும்பில் மடுவங்கள் அமைக்கப்பட்டமை.

(iii) V,V வைரமுத்து - பாடல் திறமை, அரிச்சந்திரனாக பாகம் ஏற்றமை பாடலும் நடிப்பும் கவர்ச்சி வெளிப்பாடும் இணைந்தமை.

பபூன் செல்லையாபிள்ளை - பபூன் வேடத்தில் சிறப்புப் பெற்றமை, கிருஷ்ணாழ்வார் - கிருஷ்ணன் வேடத்தைச் சிறப்பித்தமை, வைரவி அண்ணாவியர் - தனது சமூகத்தவரை இத்துறையில் வளர்த்தமை.

4. (i) ஒரு நாடகம் எழுதப்படுவதாலோ பாடப்படுவதாலோ நாடகம் ஆகாது. அது அரங்கில் நடிக்கப்படவேண்டும். நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப்படுவது. அது நிகழ்த்தப்படும் இடமே அரங்கு ஆகும். அரங்கு என்பது நாடக நிகழ்ச்சி கட்புலனாக முகிழ்த்தெழும் இடத்தைக் குறிக்கிறது. ஆற்றுவோரும் பார்ப்போரும் சந்தித்து தம் உணர்ச்சிகளால் பரிமாறிக்கொள்வதற்கான அழகியல் வெளியாக நாடக அரங்கு உள்ளது. இந்த அரங்கு சமதளமாகவோ உயர்த்தப்பட்டதாகவோ அமையலாம்.

(ii) கருத்துருவ நிலையில் உள்ள அரங்குகள் எனின்

மரபுவழி அரங்கு

நவீன அரங்கு

ஷ்பெஷல் நாடகம்

பாடசாலை அரங்கு

பௌதிக நிலையில் உள்ள அரங்கு எனில்

படச்சட்ட அரங்கு

தெருவெளி அரங்கு

வட்டக் களரி

திறந்தவெளி அரங்கு

மரபு வழி அரங்கு

ஆடல் பாடல் மூலமான சித்திரிப்பு

வட்டக்களரியில் ஆடப்பட்டமை

புராண இதிகாச நாட்டார் கதைகளைக் கொண்ட யதார்த்தமற்ற அரங்கு

ஆண்களே பெண்வேடமேற்றனர்

ஆற்றுவோர் பார்ப்போர் உறவு ஊடாட்டம் நெருக்கமானது.

பாரம்பரிய ஒளிவிதானிப்புக் கருவி பயன்பாடு

சுற்றிவர பார்வையாளர்

*தெருவெளி அரங்கு*

வெளியைக் களமாகக் கொண்டது

சிறுதொகைப் பார்வையாளர்

பெரிய அசைவுகளுக்கு இடம் அளிப்பது

தளர்வான பார்வையாளர்

பிரசாரத்திற்கு உதவுவது

*நவீன அரங்கு* -

மேல் நாட்டவர் வருகையுடன் தோன்றியது

புறொசீனியம் அரங்கை அறிமுகம் செய்தல்

எழுத்துரு வந்தது

ஆங்கிலம் கற்ற மத்திய தரவர்க்கத்தின்

இரசனையைப் பூர்த்தி செய்ய உருவானது

ஒகஸ்ரா போல்

*பாடசாலை அரங்கு*

கல்விசார் விடயங்கள் பேசப்பட்டன.

சிறுவர்களின் ஆளுமை உள முதிர்ச்சி வெளிப்பட்டது.

பாடசாலை மாணவர் நடித்தனர்.

மாணவர்கள் மாணவர்களும் பெற்றோரும் பார்வையாளர்

5. (i) உடையார் மிடுக்கு

பொருளோ பொருள்

சுந்தரம் எங்கே

தவறான எண்ணம்

கண்ணன் கூத்து

முருகன் திருகு தாளம்

துரோகிகள்

மாணிக்கமாலை

சங்கிலி

நாட்டவன் நகர வாழ்க்கை

(ii) சமகால அரசியல் பிரச்சினைகள்
சமூகப் பிரச்சினைகள்
குடும்பப் பிரச்சினைகள் (திருமணம், சொத்து)

(iii) அங்கம், காட்சி போன்ற பிரிப்புகளைக் கொண்டு இருந்தது.
மண்வாசனை ததும்பும் கதைகள்
யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கு
ஈழத்துக் கதா பாத்திரங்கள்
சாதியாசாரம் பேணும் உடையார், விதானையார்
கிராமத்துக் குடியானவர்
ஆங்கிலம் கற்றோர்

6. (i) இராவணன்
மண்டோதரி
இராமன்
இலக்குவன்
இந்திரஜித்
கும்பகர்ணன்
அங்கதன்

(ii) இராவணேசன் ஓர் துன்பியல் நாயகனாகச் சித்திரிக்கப்படுகிறான். அதாவது தான் தோற்பது உறுதி என்று தெரிந்தும் தனது வீரத்திற்காக இலங்கையின் வீழ்ச்சியை ஏற்ற நாயகன் என்ற சித்திரிப்புக் காரண மாக அவன் இராவணேசன் எனப்பட்டான்.

(iii) படச்சட்ட மேடைக்கென புதிதாக எழுதப்பட்டது.
விடிய விடிய ஆடப்படாமல் 1 1/2 மணி நேர ஆற்றுகையாக அமைந்தது.
நடிப்பிற்கும், பாத்திரச் சித்திரிப்பிற்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டது.
காட்சி மாற்றங்கள் ஒளி மூலம் உணர்த்தப்பட்டன.
பெண் பாத்திரங்களைப் பெண்களே ஏற்று நடித்தனர்.
இராவணனை துன்பியல் நாயகனாகச் சித்திரித்தது.
எடுத்துரைஞர் பயன்படுத்தப்பட்டனர்.
ஒரு பக்கப் பார்ப்போரை மையமாகக் கொண்டு செம்மைப்படுத்தப் பட்ட ஆடை அணிகளின் ஒப்பனை.

7. *நெறியாளர்*

அருவ மூலகமான எழுத்துருவிற்கு உயிர் கொடுத்து மேடைக்கென

திட்டமிட்டு அமைப்பவர்.

நாடகப் பிரதியைத் தெரிவது முதல் நடிகர் தெரிவு, பயிற்சி, ஒத்திகை, மேடையேற்றம் என அனைத்திற்கும் பொறுப்பானவர்.

மேடையின் சிருஷ்டிகர்த்தா.

படைப்பாக்க மனநிலை, படைப்பாக்க அனுபவம் ஆகிய இருநிலைகளிலும் செயற்படுபவர்.

மேடையையும், நடிகனையும் தன் படைப்பாக்க சாதனமாகப் பயன் படுத்துபவர்.

*நடிகர்* (Actor/ Actress)

உருவகப்படுத்துபவர்

போலச் செய்பவர்

ஆள்மேற் கொள்பவர்

பாத்திர மேற்பவர்

செய்து காட்டுபவர்

பாகமாடுபவர்

*பார்ப்போர்*

காட்சியைப் பார்ப்பவர்

பார்த்து அதில் லயிப்பவர்

இந்த லயிப்பின் ஊடாக சுவை பார்ப்போர் நிலையில் உணரப் படுகிறது.

ஆற்றுகையுடன் செயல் முனைப்பான பங்கேற்பைச் செய்வதன் மூலம் ஆற்றுகையின் போக்கை மாற்றுபவர்

8. (i) கோலம்

சொக்கறி

நாடகம

நூர்த்தி

(ii) *கோலம்*

வேடமும் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு கோலத்தில் தோன்றும்

நாளாந்தம் காணும் பாத்திரங்கள்

இரவில் தொடங்கி விடிய ஆடப்படும்

பாடர் குழுவே பாடல்களைப் பாடியது

தானாயபல எனும் வட்டக் களரியில் ஆடப்படும்.

*சொக்கறி*

ஊமச் செயற்பாடுகளைக் கொண்டது

கண்டிப் பிரதேசத்திற்குரியது

காத்தவராயன் கூத்தை ஒத்த இசை நடன வடிவத்தைக் கொண்டது.

கேலியும் கிண்டலும் நிறைந்தது.

விரசமான உரையாடல்

சமுதாயக் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகிறது

சொக்கறியின் கதை சுருக்கக் குறிப்பு

*நாடகம*

கிறிஸ்தவக் கதைகள் இடம் பெறுவது

இசை நாடகம் எனவும் அழைக்கப்படுகிறது

உரையாடல்களும் பாடலும் இடம்பெறும்

வசனங்கள் இசைத்தன்மையுடையன.

ஆடலும் முக்கியம் பெறும்

கையிருப்புப் பாத்திரம் உள்ளது

மேடைக்குக் கொண்டுவர முடியாத பாத்திரங்களை எடுத்து உரைப்பார் பொத்தே குரு

நூர்த்தி

சிங்கள இசை நாடகங்களே நூர்த்தியாகும்

கொட்டகை அமைத்து முன் திரை பின் திரை பக்கத்திரையுடன் நிகழ்த்தப்பட்டது.

வீரதீர கதைகள் இசையுடன் பாடி நடிக்கப்பட்டன.

இந்துஸ்தானி இசை

சூத்திரதாரி, விதூஷகன் பாத்திரங்கள் அறிமுகம்

ஜோன் டீசில்வா, டொன் பஸ்ரியன்.

(iii) எதிர்வீர சரத் சந்திர

மனமே, சிங்கபாகு, வெல்லவகும்

# நாடகமும் அரங்கியலும் II - 2008 (New)

1. (i) கூத்து
   (ii) பார்சி மக்களால் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட அரங்கு. தெலுங்கு வழியாகத் தமிழுக்கு வந்தது.
   (iii) தெருக்கூத்து, கணியான் கூத்து
   (iv) ஸ்பெஷல் நாடக மரபு.
   (v) தமிழ்நாட்டின் பாரம்பரியக் கூத்து மரபாகும். பிற்காலத்தில் தெரு வெளிகளில் ஆடப்பெற்றமையினால் அப்பெயர் பெற்றது.
   (vi) 75 வயது
   (vii) ஒற்றுமையாக இயங்குவதன் மூலம் எதையும் சாதிக்கலாம்.
   (viii) காட்சித் தேவைக்கேற்ப ஒளியின் அளவைக் குறைப்பது.
   (ix) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி
   (x) பாத்திரத்தைச் சித்திரிக்கும் முறைமை, பார்ப்போரிடையே பாத்திரம் பற்றிய நம்பகத் தன்மையை ஏற்படுத்தும் நடிப்பு முறைமை

2. (i) பாத்திர இயக்கம் மூலம் கதையை வளர்த்துச் செல்லும் முறைமை, சம்பவங்களுக்கிடையில் வெளிப்படும் முரண்நிலை, மோதுகை.
   (ii) பார்ப்போரின்றி நாடகம் இல்லை. பார்ப்போராலேயே நாடகம் ரசிக்கப்படுகின்றது. பார்ப்போரின் பதிற்குறிகள் ஆற்றுவோரைச் சென்றடையும் போது தான் நாடகம் முழுமை பெறுகின்றது.

3. (i) வேட்டைத் திருவிழா முருகன், விஷ்ணு, மிருகங்கள், வேடர்கள், பக்தர்கள், தேவகணங்கள்
   அல்லது யேசு மரியம்மை, தண்டிப்போர், குற்றவாளிகள்
   (ii) தெய்வம் நீதி வெல்வதற்கு உதவும், தர்மம் வெல்லும் அநீதி அழியும் கொடியோர் அழிவர்.

4. (i) சித்திரிப்பு, எடுத்துக் கூறல், போலச் செய்தல்
   (ii) நான்கு வகை
   (iii) ஆங்கிக அபிநயம்,
   வாசிக அபிநயம்
   ஆஹார்ய அபிநயம்
   சாத்வீக அபிநயம்

(iv) நாடகத்தின் உணர்ச்சி சார்ந்த, குரல் சார்ந்த, விடயம் சார்ந்த வெளிப் பாட்டிற்கு உதவுகின்றன.

5. (i) எந்தையும், தாயும் யதார்த்தக் காட்சிச் சூழலையும், மழை மோடி மைப்படுத்தப்பட்ட காட்சிச் சூழலையும் விபரிப்பதாக அமையும். (நாற் சார் வீடு)
   (ii) சோகம் மரண ஓலம்
   (iii) வயலின், ஹார்மோனியம், பறை, தபேலா, கிளாரினெற்
   (iv) சோக உணர்வு

6. (i) பாத்திரங்கள் - சிவக்கொழுந்து, கார்த்திகேசு, செல்வி, சந்திரன் மொழிக் கையாளப்பட்டுள்ள முறைமை, மோடிமைப்பட்ட முறையில் அமைந்த சம்பவங்கள்.

7. (i) நாடக பாடத்தை, நாடக நெறியாளரைத் தெரிவு செய்வதிலிருந்து அரங்கின் அனைத்து விடயங்களையும் ஒழுங்கு முறைமைக்குட் படுத்துபவரும், நிதி நடவடிக்கைகளோடு தொடர்புபடுபவரும் தயாரிப்பாளர் ஆவர்.
   (ii) நாடக பாடத்தை நன்கு வியாக்கியானித்து பார்ப்போருக்கு அதனை அரங்கியல் பூர்வமாக அறிக்கை செய்யும் நுட்பத்தினை வளர்த் தெடுப்பவர் நெறியாளர் ஆவர்.
   (iii) தயாரிப்பாளர் - தயாரிப்பின் அனைத்து விடயங்களையும் கண் காணிப்பவர். நெறியாளர் அறிக்கை முறைமையில் மட்டும் கவனம் எடுப்பவர்.

# நாடகமும் அரங்கியலும் II - 2008 (Old)

1. (i) நாடகம் மனிதனையும், மனித உறவைப் பற்றியும் பேசுகிறது. இந்த உறவுநிலை காரணமாக மனித மோதுகைகளை, முரண்களை விளங்கிக் கொள்ளவும், அதனூடாகச் சமூகத்தை விளங்கிக் கொள்ளவும் முடிகிறது.

(ii) நாடகம் ஒரு கூட்டுக்கலை வடிவமாகவும், பார்ப்போரை முன்னெதிரே கொண்ட நேரடிக் கருத்துப் பரிவர்த்தனை கொண்ட ஒரு ஆற்றுகைக் கலை வடிவமாகவும், காணப்படுகின்றது. ஆற்றுகைகள் ஒவ்வொன்றும் மீள நிகழ்த்தப்படும்போது புத்துயிர் பெறுவனவாகவும், பிறக்கும் கணத்திலேயே இறந்து பார்ப்போரின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலை வடிவமாகவும் உள்ளது.

2. (i) ஒருவர் திறம்பட நடிப்பதற்கு அடிப்படையில் உடல் சார்ந்த, குரல் சார்ந்த, உளம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதற்காகப் பலவித அரங்க விளையாட்டுக்கள், ஆடல், பாடல் அசைவியக்கப் பயிற்சிகள், மூச்சுப் பயிற்சி, புலப் பயிற்சி, கருத்தூன்றற் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, உணர்ச்சி ஞாபகப்படுத்தற் பயிற்சி , தியானம், யோகா போன்ற இன்னோரன்ன பயிற்சிகள் வழங்கப்படு கின்றன.

(ii) நடிகர் பார்ப்போரிடம் எதைத் தொடர்புறுத்த விரும்புகின்றாரோ அதற்கு மேற்கூறிய பயிற்சிகள் ஒவ்வொன்றும் உதவுகின்றன.

3. (i) ஆற்றுவதற்காக அல்லது ஆற்றப்படுவதற்காக எழுத்து உருவில் உள்ளது எழுத்துரு. எழுத்துரு என்பது ஒரு சட்டகம் தான். அந்த எழுத்துரு, அந்த நாடகத்திற்கான உள்ளடக்கத்தை ஆற்றுவோர் பார்ப்போருக்கு உணர்த்த உதவும். எழுத்துரு ஒரு வழிகாட்டியோன். சொல் வடிவங்களாக மட்டும் தெரியும் படிமங்கள், காட்சிகள், காட்சித் தொடர்கள் என்பன ஆற்றுகையின் பொழுது பூரண பொருட் பொலிவுடையனவாக வெளிவரும்

(ii) எழுதப்பட்ட நிலையிலுள்ள ஒரு எழுத்துரு ஆற்றுகையில் தான் முழுமை பெறுகின்றது. ஆற்றுவோர் ஒவ்வொருவரும் தத்தமது வியாக்கியானத்திற்கேற்ப நடித்துக் காண்பிக்க முடியும். நாடகாசிரியரின் எழுத்துருவிற்குப் பின்னால் மறைந்துள்ள நாடகச் செயல்களைப் புரிந்து கொள்வதன் மூலம் இது சாத்தியமாக்கப்படும்.

4. (i) சடங்குகளில் காணப்படும் எத்தகைய அம்சங்கள் அதனை அரங்காகப் பார்க்கத் தூண்டின?

கதை
கதையின் பின்புலமாகத் தெரியும் ஐதிகம்
நம்பிக்கை
பார்ப்போர் உணர்வுரீதியாக ஒன்றிணையும் தன்மை
மீள நிகழ்த்தற் பண்பு
இயக்கம்

(ii) சடங்கிலிருந்து நாடகக்கலை உருவாகும் படிநிலைகளை
நாடகம் சார் சமயச் சடங்கு
சமயக் கரணம் சார் நாடகங்கள்
சமயச் சடங்கிலிருந்து விடுபட்ட நாடகம்
எனப் பார்க்கலாம்

(iii) சடங்கில் அதுவரையும் நம்பிக்கையுடன் பங்கேற்ற மக்கள் மத்தியில் நம்பிக்கை பற்றிய சிரத்தை இல்லாமற் போகின்றபோது நிகழ்த்துவோர், பார்ப்போர் என இரு கிளைப்படப் பிரிகின்றனர். அப்போது அரங்கு தோன்றுகிறது.

5. பாத்திரங்கள் - அருணாசலம், மனைவி சிவக்கொழுந்து, மகள் திலகவதி, பண்டிதர், செல்லம்மா, மருமகன் சுந்தரம், பவானி, சியாமளா

கலியாணம் என்ற பிரச்சினையை மையமாக வைத்துப் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் அசைய விடப்படுகின்றன. சொற்களுக்கூடாகப் பாத்தர வகைபாடுகள் அறிய வைக்கப்படுகின்றன. அருணாசலம் ஒரு சாதி வெறி பிடித்தவராகவும் குடும்பக் கட்டமைப்புக்குள்ளேயே என்ரை காசு.... என்ரை சொத்து... என்ற அங்கலாய்ப்புக்களும், செ ாத்துக்கள் வெளிச் செல்லாத வகையில் சொந்த உறவுக்குள் திருமணம் முடிக்கப்படும் சம்பிரதாய முறைமைகளும் அவற்றுக்கு ஊடாகப் பாத்திர முரணணிகளும் தெரிய வருகின்றன. பாத்திர ஊடாட்டம் ஒவ்வொன்றும் அடுத்தடுத்த படிநிலை வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதாக அமைக்கப்படுகின்றன.

6. (i) காட்சிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? (வினா உள்ள முறையில் எழுத்துப்பிழை ஒன்று உள்ளது. எவ்வாறு அமைக்கப்படும்? என்பதே சரியான வினாவாகும்.)

சம்பவங்களின் தொடர்ச்சி தான் நாடகம். ஒவ்வொரு காட்சிக்குள்ளும் ஒரு முழுமை பெற்ற சம்பவத்தை அதனூடாக ஒரு கதை

யையும் காணலாம். இந்தச் சம்பவ முழுமைக்குள் அடங்கும் விடயங்களான, பாத்திரங்களின் செயல்கள், பாத்திர உணர்ச்சிகள் அவற் றின் மோதுகைகள் முரண்நிலைகள் என்பன இன்னொரு காட்சிக்கு நம்மை இட்டுச் செல்வதாகப் பின்னப்பட்டிருக்கும்.

(ii) மேற்கூறிய அம்சங்கள் பாத்திர வளர்ச்சி நிலைக்கான, அதன் மாறுதல்களுக்கான காரணங்களை அறிய உதவுகின்றன. கதையின் தொடர்ச்சிக்கும் இவை உதவுகின்றன.

(iii) நாடக முழுமையின் ஒரு பகுதி தான் காட்சி. பகுதிகளுக்கும், முழுமைக்கும் இடையிலான உறவைக் கொண்டிருக்கும் அதாவது, நிகழ்ச்சிகள், சம்பவம் சம்பவக்கோவை என்பவை மூலம் நாடக முடிவை நோக்கி ஒழுங்குபடுத்தப்படுவதாக இருக்கும்.

7. (i) துறவிப் பாத்திரமானது. நாடகத்தின் விடயப் பொருளோடு தொடர்புடையது என்பதற்கும் அப்பால் ஒரு மேலான நிலையில் வைத்துச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

(ii)துறவிப் பாத்திரம் பற்றிய பௌதீக, சமூக உளவியல் அம்சங்களை மனதிற்கொண்டு வேடவுடை ஒப்பனைகளைத் தீர்மானிக்கும் அதே வேளை மாணவரின் கற்பனை எவ்விதம் அப்பாத்திரம் தொடர்பாக வெளிப்படுகின்றது என்பதையும் கருத்திற்கொண்டு புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

8. (i) வேடமுகம் பயன்படுத்தல், பொதுநிலை வகை நிலைப்பட்ட பாத்திரங்களைக் கையாள்தல், ஆட்டம், சமதரையான வட்டக்களரியில் ஆற்றுகைகளை நிகழ்த்துதல், கிராமிய மக்களுக்கேயுரிய சிங்கள மொழிப் பிரயோகம், அங்கதம்....

(ii) தொவில், சன்னியக்கும, கொகம்ப கங்காரிய, பகன்மடுவ, கம்மடுவ, ரட்டயக்கும

(iii) மேற்கூறியவற்றில் ஏதாவது ஒரு சடங்கு ஆட்டம் பற்றி விபரிக்கப் படல் வேண்டும்

# நாடகமும் அரங்கியலும் II - 2009

1) (i) சிலப்பதிகாரம்
 (ii) திரிகூடலூர் ராஜப்பக் கவிராஜர்
 (iii) கோபால கிருஷ்ண பாரதியார்
 (iv) மட்டக்களப்பு
 (v) கேரளா
 (vi) விடுதலை, பயம், ஆபத்து, எழுச்சி (2 புள்ளி)
 (vii) கோலம், சொக்கரி (2 புள்ளி)
 (viii) பாத்திரமாக வாழுதல்
 (ix) இசைநாடகம்
 (x) கோமாளி
 (vi), (vii) ஆகிய வினாக்களின் விடைகளிற்கு புள்ளிகள் இரண்டு வீதம் வழங்குக.) (12 புள்ளிகள்)

2) (i) சூரன் போர், பாஸ்கா, பாண்டவர் வனவாசம் போன்றன (வேறு சடங்குகளையும் கவனத்திற் கொள்க.)
 (03 புள்ளிகள்)
 (ii) ஏதாவது ஒன்று பற்றி விளக்குவதற்கு (04 புள்ளிகள்)
 (iii) நடிகர்
 கதையும் கருவும்
 ஆடுகளம்
 கட்டமைப்பும் சூழமைவும்
 காட்சிகள்
 வேட உடைகள்
 ஒப்பனைகள்
 ஒளியூட்டக்கள்
 இசைப்பிரயோகங்கள்
 ஒலிகள்
 பார்ப்போர், பங்குபற்றுவோர் (05 புள்ளிகள்)

3) (i) ஆடும் வீடும், கரடியும் கிராம மக்களும், கோழி கோட்டான் என ஏதாவது மூன்று எழுதுவர் (03 புள்ளி)
 (ii) அவற்றுள் ஒன்று - ஆடும் வீடும்

அமைப்பு - ஆகக் குறைந்தது 07 பேர் கொண்டதும் அதற்கு மேலாக எத்தனை பேரும் விளையாடக் கூடியது.

மூன்று மூன்று ஆட்களாக மண்டபத்தின் பகுதிகளில் நிற்றல் வேண் டும். அவர்களில் ஒருவர் ஆடு போல கீழே ஓடக்கூடிய ஆயத்தத்தில் இருக்க வேண்டும். ஏனைய இருவரும் தமது கை களை உயர்த்தி கூரை போன்ற அமைப்பில் பிடிக்க வேண்டும். அவர்கள் வீடு என அழைக்கப்படுவர். இவர்களுக்கு வெளியே ஒருவர் நிற்பார். அவர் ஆடு எனக் கூறினால் ஆடு மட்டும் ஓடிச்சென்ற இன்னொரு வீட்டில் இருக்க வேண்டும். இவ்வாறு எல்லா ஆடுகளும் இடம்மாறும். இந்த வேளையில் ஆடு எனக் கூறியவரும் ஓடிச்சென்று ஒரு வீட்டுக்குள் புகுதல் வேண்டும். அப்போது ஒருவர் எஞ்சுவார். அவர் ஆடு என அல்லது வீடு என அல்லது எல்லாம் எனக் கூறலாம். வீடு எனக் கூறிவிட்டு இவர் தானும் ஒரு வீடாக மாறி நிற்பார். அப்போது எல்லா வீடு கட்டியவர்களும் இடம்மாறுவர். எல்லாம் எனக் கூறினால் எல்லாம் ஓடி மாற ஒருவர் எஞ்சுவார். இவ்வாறு தொடர்ந்து விளையாடிக் கொண்டிருக்கலாம்.

*நன்மை*

- எல்லா மாணவர்களும் பங்கேற்க வகை செய்யப்படுகிறது.
- யாருக்கும் வெற்றி தோல்வி கிடையாது.
- உடலுக்கான நல்ல பயிற்சியாக அமையும்.
- கலந்து கொள்ள பின்னிற்கும் மாணவர்களையும் இணைத்துக் கொள் ளலாம்.
- அனைவரும் உற்சாகமாகப் பங்கேற்பர். (03 புள்ளிகள்)

- அரங்க விளையாட்டுக்கள் என்பன நாடகம் பயிலும் ஒவ்வொரு நடிகருக்கும் அவசியமாகும்.
- உடல், உள, குரல் தளர்வுப் பயிற்சிகளிற்கு உதவுகின்றன.
- நேரடியான உடல், உள, குரல் பயிற்சிகளை செய்வதை விட அரங்க விளையாட்டுக்களினூடாக செய்தால் நல்ல பயனடைய முடியும்.
- நடிகரிடம் காணப்படும் புதுமையான விடயங்கள் வெளிக் கிளம்பும்.
- ஆர்வத்துடன் கற்கும் ஆவலைத் தூண்டலாம் (06 புள்ளிகள்)

4) (i) உடல் வழி (ஆங்கிகம்)
குரல் வழி (வாசிகம்)
உணர்ச்சி வழி (சாத்விகம்)
காண்பிய வழி (ஆகார்யம்) (04 புள்ளிகள்)

(ii) *(அ) உடல் வழி சித்தரிப்பு (ஆங்கீகம்)*

உடல் நிலைகள், உடல் அசைவுகள், உடற் கோலங்கள் தொடர்பானது. மெய்பாடுகள் எனவும் கூறலாம். உடல் மூலம் வெளிப்பாட்டினைக் கூறுவது. ஊமம், பலே போன்ற நாடக மரபுகளை அதிகம் பயன்படும். நடனத்திலும் அங்க அசைவுகள் பிரதானம். மூன்று வகையானவை அங்கம் எனப்படுகின்றன.

1. அங்கம் 2. உபாங்கம் 3. பிரத்தியாங்கம்

(02 புள்ளிகள்)

*(ஆ) குரல் வழிச் சித்திரிப்பு (வாசிகம்)*

குரலின் ஓசை, அசைவுகள், நெகிழ்ச்சி, லலிதம், லாவகம், கவர்ச்சி, ஏற்ற இறக்கம், அழகு போன்ற அம்சங்கள் இங்கு முக்கிய இடம் பெறும். வார்த்தைகளிற்கு அமைவாக செய்யப்படும் சித்திரிப்பு ஆகும்.

நாடகத்தில் பிரதானமாக இடம்பெறும் பேச்சு, உரையாடல், பாடல் போன்றனவற்றுடன் வெளிப்படுவது. இசைநாடக கூத்து போன்றவற்றில் அதிகம் முக்கிய இடம்பெறுகிறது. (02 புள்ளிகள்)

*(இ) உணர்ச்சி வழிச் சித்திரிப்பு (சாத்விகம்)*

நடிகரின் எல்லாவகையான உணர்ச்சிகளையும் குறித்து நிற்பது. பரதமுனிவர் எட்டு வகையான உணர்ச்சிகள் உண்டென கூறுவர். (கோபம், சோகம், வீரம் , அற்புதம், பயம், அருவருப்பு, காதல், மகிழ்ச்சி) பின்வந்தவர்கள் சாந்தம் பக்தி எனக் கூறி பத்து வகையாக வகுப்பர். உணர்ச்சி என்பது பா (Bha)வம் ஆகும்..ஆகவே இந்த உணர்ச்சி வெளிவரும் வண்ணம் நடிகர் இயங்க வேண்டும்.

(02 புள்ளிகள்)

*(ஈ) காண்பிய வழி சித்திரிப்பு (ஆகார்யம்)*

பார்வையாளர் உணரும் வண்ணம் கண்ணால் பார்க்கக்கூடிய ஆடை, அணி, அலங்காரங்கள், மேடை, காட்சிகள், ஒளி விதானிப்புகள் என்பனவும் இசையும் (பாடலற்ற) இதற்குள் அடங்கும். இவற் றினூடாக பார்வையாளருடன் நடிகர் தொடர்பு கொள்வார். (02 புள்ளிகள்)

(08 புள்ளிகள்)

*குறிப்பு* :- மாணவர் ஆங்கிகம், சாத்விகம், வாசிகம், ஆகார்யம் என குறிப்பிடப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.

5) எந்தையும் தாயும்

(i) கலாநிதி, குழந்தை, ம. சண்முகலிங்கம் (02 புள்ளிகள்)

(ii) (iii)

| | |
|---|---|
| சங்கரப்பிள்ளை - | 75 |
| ஐயாத்துரை - | 50 |
| செல்வரட்ணம் - | 65 |
| மகேஸ்வரி - | 60 |
| வசந்தி - | 25 |
| கண்ணன் - | 20 |
| (02 புள்ளிகள்) | (02 புள்ளிகள்) |
| | (04 புள்ளிகள்) |

(iv) பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு இங்கு ஏக்கத்துடன் காணப்படும் பெற்றோர். (இதை ஒட்டி வரும் விடைகளையும் கவனித்து புள்ளியிடுக.) (03 புள்ளிகள்)

(v) நாற்சார வீடு, நாடக வீடு (03 புள்ளி)

6) (i) நடிப்பு என்பது நாடகத்தில் நடிக்கும் நடிகர் வெளிப்படுத்தும் உடல், உள, குரல் வெளிப்பாடுகள் ஆகும். அவர் போலவும் செய்யலாம் உண்மையாக வாழ்ந்தும் காட்டலாம். புதியது புனைந்தும் காட்டலாம். (03 புள்ளிகள்)

(ii) (அ) ஊமம் என்பது வார்த்தைகள் அற்ற செயல் எனப்படும். நடிகர் தமது சைகைகள், குறியீடுகள், உடல் பொறியை செய்து காட்டுவது ஆகும். உணர்வுகள் இங்கு முக்கிய இடத்தை வகிக்கும். மெல்லிய சிறு அசைவுகளிற்கும் அர்த்தம் உண்டு.

(03 புள்ளிகள்)

(ஆ) போலச்செய்தல் கலைகளிற்கு அடிப்படை என்கிறார் அரிஸ்டோட்டில். நாடகத்திற்கும் அது அவசியம். நடிகர் இன்னொருவரைப் போல உடலால், குரலால், சைகைகளால், குறியீடுகளால், வேட உடையால், ஒப்பனையால் இயக்கத்தால் போலச் செய்கிறார். சம்பவங்களையும் மனிதர்களையும் உலகில் உள்ள அனைத்தையும் போலச் செய்ய முடியும். (03 புள்ளிகள்)

(இ) புத்தாக்கம் செய்தல் (Improvisation) புத்தாக்கம் என்பது புதிதாக ஒரு சம்பவத்தை, செயலை செய்து காட்டுவது ஆகும். நடிகருக்கு கற்பனை அவசியமாகும் பொருட்களைக் கொண்டோ காட்சிகளை உருவாக்கியோ புத்தாக்கம் செய்யலாம்.
தரப்படும் (Given) எந்த விடயமாயினும் செய்ய வேண்டியது நடிகரின் கடமையாகும். (பாடல், பொருள், கவிதை, உரைநடை, துண்டுப்பிரசுர காட்சி எதுவாயினும் தரப்படும் விடயத்தை செய்து காட்டுவது.)

7) (i) (அ) காட்சி விதானிப்பு என்பது கண்களிற்கு பார்க்கக் கூடியதான பின்னணியையும் காட்டுவது.

(ஆ) அந்நாடகத்தின் மனநிலையைக் காட்டுவதாகும்.

(ii) (அ) நாடகத்தின் கதையோட்டம்

(ஆ) பாத்திரங்களின் உணர்வு மற்றும் நாடக உணர்வு நிலைகள்

(இ) நாடகம் இடம்பெறும் காலம், சூழல் என்பன

(iii) இவரின் வயது - 75

- ஒரு சாரம் மெல்ல உயர்த்திக் கட்டியிருப்பார்
- ஒரு கையுள்ள பெனியன் (பெரும்பாலும் பழையதாகக் காணப் படலாம்.)
- கையில் ஒரு பிடிக்கும் கொட்டன் (பொல்லு)
- தலை நரைத்துக் காணப்படல் முழுமொட்டை வழுக்கை
- முகம் சுருங்கிய நிலை (வயோதிபம்)
- கண்ணாடி அணிந்திருத்தல்
- நெற்றியில் திருநீற்றுப்பூச்சு

(இங்கு மாணவரின் அறிவு, அனுபவம் பற்றி நோக்குக.)

(உ ம்) பொல்லு பிடிக்காத 75 வயதுள்ளோரும் உண்டு

# நாடகமும் அரங்கியலும் II - 2010

1. (i) 11 வகை ஆடல்கள் (பதினொன்று) (01 புள்ளி)
   (ii) பவளக்கொடி, அரிச்சந்திரா, சதி சுலோசனா, அபிமன்னன் சுந்தரி, சாரங்க தாரா (01 புள்ளி)
   (iii) க. சிதம்பரநாதன் (01 புள்ளி)
   (iv) பொருளோ பொருள், தவறான எண்ணம், உடையார் மிடுக்கு, நாட்டவன் நகரவாழ்க்கை, துரோகிகள், சுந்தரம் எங்கே, சங்கிலி, மாணிக்க மாலை, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, (ஏதாவது இரண்டு). (01 புள்ளி)
   (v) வேலு சரவணன் (01 புள்ளி)
   (vi) பாண்டிருப்பு (கல்முனை) (01 புள்ளி)
   (vii) பதினெட்டு (18) (01 புள்ளி)
   (viii) வந்தாறுமூலை செல்லையா அண்ணாவியார் (01 புள்ளி)
   (ix) வார்த்தையற்ற செயல் (02 புள்ளி)
   (x) 1. கேட்டலுக்குரியது (இசை, ஒலி, குரல், பேச்சு, சத்தம்).
   2. தொழில் நுட்பம் சார்ந்தது. (02 புள்ளி)

2. (i)
   1. மனிதனை மோதுகை நிலையில் வைத்து சித்திரிப்பது.
   2. கணப் பிரசன்னமாவது.
   3. செய்கை நிலையில் சித்திரிப்பது.
   4. கட்புல செவிப்புலக் கலை
   5. போலச் செய்தல்
   6. சம்பவங்களின் தொகுப்பு
   7. பல்வேறு சூழமைவுகளைச் சித்திரிப்பது.
   8. உடல், குரல்/ சொல், உணர்ச்சி, காண்பிய வழிச்சித்திரிப்பு ஊடாகக் காட்டுவது.
   9. தாக்க மறுதாக்கக் கலை (பார்வையாளர் (பார்ப்போர்) - நடிகர் நேரடித் தொடர்பு).
   10. கூட்டுக் கலை

   (மேற்குறிப்பிட்டவற்றில் ஆறு பிரதான பண்புகள் விளக்கி இருப்பின் புள்ளி வழங்குக) (06 புள்ளிகள்)

(ii) இசை.
நடனம்
ஓவியம்
சிற்பம்
கட்டிடம்
இலக்கியம்
சினிமா
வானொலி, தொலைக்காட்சி நாடகம்
மற்றும் ஏனைய கலைகளில் இருந்து நாடகக்கலை எவ்வாறு வேறுபடுகின்றது என ஒப்பிட்டுக் கூறுவர். இவற்றில் ஏதாவது இரண்டு அல்லது மூன்று கலைகளை மாணவர்கள் முன் வைக்கலாம்.

(06 புள்ளிகள்)

03 (i) 1. உடல் பயிற்சி
2. குரல் பயிற்சி/ சொல்
3. உளப் பயிற்சி (அவதானம், கருத்தூன்றல் பயிற்சிகள்).

(03 புள்ளிகள்)

(ii) 1. உடற் பயிற்சி:-
உடலை தளர்வாக, நெகிழ்வாக வைத்திருப்பதற்கான பயிற்சிகள், உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை சங்கிலித் தொடராக வழங்கப்படும். இதே போன்று அரங்க விளையாட்டு ஊடாகவும் உடற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஆட்டங்கள், அசைவுகள், ஊமச் செயற்பாடுகள் மூலமும் உடற் பயிற்சிகள் வழங்கப்படும்.

2. குரல் பயிற்சி:-
இதில் தியானத்துடன் கூடிய சுவாசப் பயிற்சி/ மூச்சுப் பயிற்சிகள், குரலுக்கான பேச்சுப் பயிற்சிகள், உடலின் அடிவயிறு, நெஞ்சு, தொண்டை, மூக்கு (நாசி), உச்சந்தலை, போன்ற பகுதிகளில் தசைநார்கள் அழுத்துவதன் ஊடாகச் செய்யப்படும். பல்வேறு நாடக பாடங்கள், கவிதைகள், துணுக்குகள், என்பவற்றை வாசிப்பதன் ஊடாக (பல்வேறு உணர்வுகளுடன்) குரல் பயிற்சி வழங்கப்படும்.

பல்வேறு நவீன நாடக பாடல்களை, மரபுவழி நாடக பாடல்களை பாடுவதனூடாகப் பயிற்சிகள் வழங்கப்படும். குரலுக்கான அரங்க விளையாட்டுக்களை விளையாடுவதனூடாகவும் குரலுக்கான பயிற்சி வழங்கப்படும்.

3. உளப் பயிற்சி:-

புலனுணர்வு சார்ந்ததாக அமையும் இவை மனதை ஒருநிலைப் படுத்துவதற்கான பயிற்சிகள் (கருத்தூன்றல், அவதானப் பயிற் சிகள்.)

கூர்மையாக ஒவ்வொரு புலன்களையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) என்பவற்றிற்கான பயிற்சிகள், அரங்க விளையாட்டுக்கள் மூலம் உளப் பயிற்சிகளை செய்யலாம். (04 புள்ளிகள்)

(iii) அரங்க விளையாட்டுக்கள் என்பன உடல், குரல், உளச் செயற்பாடு களைச் செயல்முனைப்பாகச் செய்ய உதவுவனவாகும். உடற் பயிற் சிக்கான அரங்க விளையாட்டு என்பது, தனியே உடலுக்கான அரங்க விளையாட்டு மட்டுமன்றி உளச் செயற்பாட்டிற்குரியது மாகும். அவை நடிப்பதற்குரிய ஆர்வத்தையும் உந்து சக்தியையும் வழங்கு கின்றன.

நடிகருக்குரிய உடல், குரல், உளரீதியான செயற்பாட்டை அவை ஊக்கப்படுத்தும் நடிப்பின் போது பாத்திரத்தின் தன்மையை நன்கு ணர்ந்து பாத்திரச் சித்திரிப்புக்கு (கருத்தூன்றிச் செய்வதற்கு) அரங்க விளையாட்டுக்கள் உதவுகின்றன.

உதாரணம்:- கரடியும் கிராம மக்களும், ஆடும் வீடும்.

(05 புள்ளிகள்)

04. (i) தயாரிப்பாளர் செய்யும் ஒழுங்கு நடவடிக்கைகள்:-

1. நாடகத் தயாரிப்பிற்குப் பொறுப்பானவர்.
   - I தொழில்முறை ரீதியான தயாரிப்பாளர்.
   - II பயில்முறை ரீதியான தயாரிப்பாளர்.
2. நடிகரைத் தெரிவு செய்தல்.
3. நாடகத்திற்கான செலவீனங்களுக்குப் பொறுப்பாக இருத்தல்.
4. நாடகத்திற்கான விளம்பரங்களைச் செய்தல்.
5. நாடகத்திற்கான நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்தல்.
6. நாடகத்திற்கான அரங்கினைத் தீர்மானித்தல். (ஆற்றுகைக்குரிய இடம்).
7. நாடகத்திற்கான மக்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்துதல். (06 புள்ளிகள்)

(ii) நெறியாளர் பார்வைத் திறன்:-

1. நெறியாளர் கலை என்பர்.
2. வியாக்கியானம் செய்யும் கலைஞன் நெறியாளர் ஆவார்.
3. நாடகப் பிரதியைத் தெரிவு செய்தல். (சமூகநோக்கு, சமூகத்தேவை, கருத்துநிலை, நடிகர் எண் ணிக்கை).
4. நடிகர் தெரிவில் நெறியாளரின் நோக்குநிலை.
5. நாடக எழுத்துருவில் சொல்லப்படுகின்ற பாத்திரத் தெரிவு. (நடிபாகம், நடிபாக வீச்சு, நடிபாக எல்லை, நடிபாக ஐக்கியம்).
6. ஏனைய கலைகளையும் ஏனைய கலைஞனையும் பயன்படுத்தும் விதம்.
7. மேடையையும், நடிகர்களையும் கையாளும் விதம் (அளிக்கை யில்.)
8. பார்வையாளர் தெரிவு (இலக்குப் பார்வையாளர், பொதுப் பார்வை யாளர், பரீட்சார்த்த பார்வையாளர்).

(06 புள்ளிகள்)

05. (i)

1. நாடகத்திற்குரிய பாத்திரத்தின் தன்மையை முனைப்புறுத்திக் காட்டுவதற்கு/ பாத்திரங்களை அறிந்து கொள்வதற்கு.
2. பாத்திரத்தின் வயது, அந்தஸ்து, தொழில் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு.
3. நாடகத்தின் காலம், சூழ்நிலை என்பவற்றைக் காட்டுவதற்கும் பாத்திரத்திற்கு வேட உடை ஒப்பனை அவசியம்.
4. நாடகக் கதை நிகழும் பண்பாட்டைப் புலப்படுத்துவதற்கு வேட உடை ஒப்பனை அவசியம்.
5. நாடகத்திற்கான வகை, மோடி என்பவற்றைக் காட்டுவதற்கு வேட உடை ஒப்பனை அவசியம் (04 புள்ளிகள்)

(ii)

1. ஒளி என்பது மேடையில் நடைபெறுவதைக் காண்பதற்கு உத வும்.
2. ஒளியின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துதல்.
   - பொட்டொளி - அசையும் பொட்டொளி, அசையா பொட் டொளி
   - கீற்றொளி
   - பெருக்கொளி/ பரப்பொளி

3. ஒளியின் பல்வேறு நிறங்களைப் பயன்படுத்தி உணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்துதல்.

உதாரணம்:-

- குளிர் வர்ணம் (நீலம், பச்சை).
- வெம்மையான வர்ணம் (செம்மஞ்சள், ஊதா).

4. ஒளியின் மங்கலாக்கிகளைப் பயன்படுத்தி ஒளிக்குரிய உணர்வு களைத் தோற்றுவித்தல்.
5. ஒளியின் வர்ணச் சக்கரங்களைப் பயன்படுத்துதல்.
6. குறியீட்டுப் பாங்கான தோற்றப்பாடுகளை ஏற்படுத்துதல்.

உதாரணம்:- இடி, மின்னல்

7. பாத்திரங்களின் நடமாட்டத்திற்குத் தேவையான திசைகளை வெளிப் படுத்தல். (04 புள்ளிகள்)

(iv) எந்தையும் தாயும் - சங்கரப்பிள்ளை:-

1. யதார்த்த பூர்வமான ஒப்பனை
2. - வயதிற்குரிய (75)
   - அந்தஸ்துக்குரிய (ஓய்வு பெற்ற மலாயன் பென்சனியர்.)
   - சமயத்திற்குரிய (அம்மன், பிள்ளையார், முருகன்.)
3. சமூக உறவு நிலை (04 புள்ளிகள்)

06. ஆம்/ இல்லை

1. நாடகத்திற்குரிய பாத்திரங்களுக்கூடாக விழிப்பு என்ற தலைப்பு எவ்வளவு தூரம் சாத்தியமாக்குகின்றார் சுந்தரலிங்கம்.
2. நாடகத்தில் விழிப்பு ஏற்படுத்தக் கூடிய காட்சிகள்.
   I செல்வியின் மன மாற்றம்
   II முதலாளி, தொழிலாளிகளின் சிந்தனைகள்.
   III கார்த்திகேசு நியாயப்பாட்டை விளங்கிக் கொள்ளல்.
   (நாடக பாடத்தினூடாக உதாரணங்களுடன் மாணவர்கள் விளக்குதல்.) (12 புள்ளிகள்)

07. (i)

1. போதிய பாடநூல்கள் இல்லை.
2. போதிய வகுப்பறை இன்மை.
3. செயல்முறைகளுக்குரிய மண்டப வசதிகள் இன்மை.
4. நாடகமும் அரங்கியலும் தொடர்பான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை.
5. பாடம் தொடர்பான பெற்றோர், ஆசிரியர், அதிபர் என்போரின் பொருத்தமற்ற மனப்பாங்கு.

6. நல்ல நாடகங்களைப் பார்க்க வாய்ப்புக்கள் இல்லாது இருத்தல். (04 புள்ளிகள்)

(ii) 1. நாடகமும் அரங்கியலும் தொடர்பான கைநூல்கள் வழங்கப் படாமை.

2. போதிய வகுப்பறை, மண்டப வசதிகள் இன்மை.

3. பாடம் தொடர்பான ஆர்வமின்மை.

4. போதியளவு பயிற்சியின்மை.

5. சக ஆசிரியர், அதிபர், போன்றோரின் ஒத்துழைப்பும், மதிப்பும் இன்மை. (04 புள்ளிகள்)

(iv) 1. நாடகமும் அரங்கியலும் தொடர்பான கைநூல்கள் தேவை.

2. பாடம் தொடர்பான திறமையான பயிற்சி பெற்ற ஆசிரியர் தேவை.

3. செயல்முறை தொடர்பான மண்டப வசதிகள், வகுப்பறைகள் தேவை.

4. பாடம் தொடர்பான பெற்றோர், ஆசிரியர், அதிபர் போன்றோருக் கான நல்ல மனப்பாண்மை தேவை.

(04 புள்ளிகள்)

# நாடகமும் அரங்கியலும் II - 2011

01. சுருக்கமான விடை

- i. கூத்து (01 புள்ளி)
- ii. கேரளா (01 புள்ளி)
- iii. கட்டியம் (01 புள்ளி)
- iv. தானாயம்பல/ சபைய (01 புள்ளி)
- v. கோழி கோட்டான், நாராய் நாராய், குலை குலையாய் முந்திரிக்காய் மொழியல்லாத மொழியில் பாடுதல் போன்றவை. குரலில் ஏற்ற இறக்கம், தொனி, புறத்தெறிதல் போன்றவற்றை முனைப்புறுத்தக்கூடிய அரங்க விளையாட்டுக்களைப் பரிசீலிக்குக (01 புள்ளி)
- vi. வேலு சரவணன் (01 புள்ளி)
- vii. கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை (01 புள்ளி)
- viii. ரட்டயக்கும, சொக்கறி (01 புள்ளி)
- ix. எல்லோரும் ஒன்றாகக் கூடி முயற்சி செய்தால் எதையும் சாதிக்க முடியும். (02 புள்ளி)
- x. அ. தொடர் நாடகமாக அமைதல்.
  ஆ. சின்னத்திரை
  இ. கமராவை ஊடகமாகக் கொள்ளல்.
  ஈ. பெரும்பாலும் குவிவுக் காட்சிகளைக் கொண்டது. (Close - up). (02 புள்ளி)
  உ. யதார்த்தப் பண்பு கூடியது. (12 புள்ளிகள்)

02. (i) தமிழ்ப் பண்பாட்டில் நாடக நிலைச் சடங்குகளின் பெயர் மூன்று தருக.

| | |
|---|---|
| - சூரன் போர் | - பாண்டவர் வனவாசம் |
| - குளுத்தி | - வேட்டைத் திருவிழா |
| - பாஸ்க்கா | - வதனமார் சடங்கு |
| - மாம்பழத் திருவிழா | |

(ii) அச்சடங்குகளில் ஒன்று பற்றி விவரிக்குக.
குறித்த சடங்கு நிகழ்த்தப் பெறும் முறை சடங்குக்கான கதை, நிகழ்களம் என்பவற்றை உள்ளடக்கியதாகப் பரீட்சார்த்தியின் பதில் அமையப் பெறுதல் வேண்டும். (04 புள்ளி)

(iii) அச்சடங்கிற்கும் நாடகத்திற்குமிடையே காணப்பெறும் பொதுப் பண்புக்களைப் பட்டியலிட்டு விளக்குக.

- போலச் செய்தல்
- மீள நிகழ்த்துதல்
- கரு
- நடிகர் - பார்ப்போர் தொடர்பும் உறவும்
- நால்வகைச் சித்திரிப்பு முறைமை (உடல், குரல், காண்பியம், உணர்ச்சி)
- அரங்கு

போன்ற பொதுப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப் பெறும் பதில்களைக் கருத்திற் கொண்டு புள்ளி வழங்கவும்

(05 புள்ளி)

(12 புள்ளிகள்)

03. (i) உமக்குத் தெரிந்த ஆறு அரங்க விளையாட்டுக்கள் தருக.

- ஆடும் வீடும்
- பசுவும் புலியும்
- பழக்கலவை
- இலக்கத்திற்கு ஒன்று சேர்தல்
- பொன்முட்டை
- குருட்டு ஓட்டோ
- கந்தையா அண்ணை சொல்கிறார்
- கரடியும் கிராம மக்களும்
- காகம் உயிர் பெறுதல்
- கோழி கோட்டான்
- நாரை நாரையாய்??.. (03 புள்ளி)

(ii) அவற்றுள் இரண்டு பற்றி விவரிக்குக?

அரங்க விளையாட்டுக்கள் ஆடப்பெறும் முறைமை, நிபந்தனைகள், விதிமுறைகள், ஆடப்பெறும் களம், பங்கேற்போர் போன்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டு அளிக்கப் பெறும் விடைகளைப் பரிசீலித்துப் புள்ளி வழங்குக. (04 புள்ளி)

(iii) அரங்க விளையாட்டுக்கள் ஒவ்வொன்றும் நாடகம் ஒன்றைப் பயில்வதற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தனவாக உள்ளனவென விளக்குக?

உடல், குரல், மனம் என்பவற்றைத் தளர் நிலையில் வைத்திருக்க உதவுகிறது.
பயம், வெட்கம் போன்ற மனத்தடைகளை அகற்றி நாடகச் செயற்பாட்டில் ஈடுபட உதவுகிறது.
படைப்பாக்க சிந்தனையை வளர்க்க உதவுகிறது.
ஆண்களும் பெண்களும் இணைந்து செயற்பட ஊக்க மளிக்கிறது.
பார்ப்போருடன் உணர்வு ரீதியாகத் தொடர்பு கொள்ள வச தியளிக்கிறது. (05 புள்ளி)

(12 புள்ளிகள்)

4. (i) நாடகத்தில் பயன்படுத்தப்பெறும் ஒளி வகைகள் மூன்றின் பெயர் களைத் தருக.
- பொட்டொளி
- பரப்பொளி/ பெருக்கொளி
- கீற்றொளி
- பக்க ஒளி
- அடித்தள ஒளி (03 புள்ளி)

(ii) நாடகம் ஒன்றிற்கு ஒளியமைப்புச் செய்யும் போது கவனிக்கப்படும் பிரதான பண்புகள் நான்கு தருக.
- நாடகத்தின் மோடியைக் கருத்திற் கொள்ளல்.
- நாடகவோட்டத்தில் வெளிப்படும் உணர்ச்சிகளைக் கணக்கில் எடுத்தல்.
- நடிகனுக்கும் பின்புலத்திற்குமுள்ள தொடர்பை வெளிக் கொணர்தல்.
- நடிகனையும் மேடைப் பரப்பையும் பார்ப்போருக்குப் புலப்படுத்தல்.
- வேட உடை, ஒப்பனையைக் கருத்திற் கொள்ளுதல்.
- நாட்கக் கதை நிகழும் காலம், இடம் என்பவற்றைக் காட் டுதல்.
- பாத்திர உணர்ச்சிகளை வெளிக்கொணர்தல்.
- காட்சியின் உணர்வை முனைப்புறுத்துதல்.

(iii) உமக்கு விதிக்கப் பெற்ற நாடக எழுத்துருவைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு காட்சிக்கும் எவ்வாறு ஒளியமைப்புச் செய்வீர்? விழிப்பு, மழை, எந்தையும் தாயும் ஆகிய எழுத்துருக்களில் ஒன்றி

னைத் தெரிந்தெடுத்து, அதனைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு காட்சியிலும் மேலோங்கி நிற்கும் உணர்வு, பாத்திர உணர்வுகள், மேடை அசைவுகள், காட்சி நிகழும் காலம், இடம், கருத்து நிலை என்பவற்றைப் புலப்படுத்தும் வகையில் விடை அமையப்பெற வேண்டும். (04 புள்ளி) (12 புள்ளிகள்)

05. நடிகர் தனது வெளிப்பாடுகளை உடலாலும் குரலாலும் மாத்திரம் காட்டி விட முடியாது. அவருக்கு காட்சி, ஒளி, ஒலி போன்ற துணைச் சாதனங்களும் அவசியம்.

1. காட்சி விதானிப்பு என்றால் என்ன?

நாடகத்தின் கரு, காட்சி, மோடி, களம் என்பவற்றின் உணர்ச்சிகளை கட்புலனாக்கும் வகையிலான காண்பிய வழிச் சித்திரிப்பே காட்சி விதானிப்பு ஆகும். காட்சித் திரைகள், நடிகர், மேடைப் பொருட்கள் என்பவற்றினை உச்சமான முறையில் பயன்படுத்தி ஒழுங்குபடுத்துவதே காட்சி விதானிப்பு. பார்வைக்குரிய காண்பு நிலையை உருவாக்குவதாகும்.

2. காட்சி விதானிப்பின் பயன்பாடுகள் 4 தருக.

நாடகத்தின் மோடி, கருவுக்கு அழுத்தம் கொடுத்தல்.
நாடகத்தின் உணர்வினை முனைப்புப்படுத்தல்.
நாடகத்தின் குறியீட்டுப் பண்பை வெளிக்காட்டல்.
நாடகத்தின் காலம், அரங்கப் பொருட்களை தெளிவாகக் காட்டல். (04 புள்ளி)

3. மழை நாடகத்திற்கான காட்சியை நீர் எவ்வாறு திட்டமிடுவீர்?

நாடக பாடத்தினோடு மேற்குறிப்பிட்ட பண்புகளை நாடக மோடிக் கமைய மாணவர் கற்பனை நிலையில் வெளிப்படுத்தல்.
(05 புள்ளி) (12 புள்ளிகள்)

06. 2009 இல் 5ம் வினாவிற்கான விடையைக் காண்க.

07. மேடை நாடகத்தில் இடம்பெறும் பின்வருவோர் ஒவ்வொருவரையும் பற்றி குறிப்புக்கள் தருக.

1) நாடகாசிரியர்

நாடகத்தைப் படைப்பவர்.
நாடக எழுத்துருவை எழுதி அளிப்பவர்.
நாடக நிகழ்ச்சிகளைக் கோர்ப்பவர். (02 புள்ளி)

2) தயாரிப்பாளர்

தயாரிப்பாளர் நாடகத்தைத் தயாரிப்பவர்.

நாடக எழுத்துருவைத் தெரிவு செய்வதிலிருந்து மேடையேற்றம் வரையுள்ள நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்.
தயாரிப்பு தொடர்பான அனைத்து செலவினங்களையும் செய்பவர்.
(நிதி) (02 புள்ளி)

3) நெறியாளர்

நாடகத்தை நெறியாள்கை செய்பவர்.
நாடக அளிக்கைக்குப் பொறுப்பாக இருப்பவர்.
எழுத்துருவிற்கு வியாக்கியானம் செய்பவர்.
நடிகரைத் தெரிவு செய்பவர்.
நடிகரையும் களத்தையும் கவனமாகக் கையாள்பவர்.
(02 புள்ளி)

4) பார்ப்போர்

நாடகத்தை நயந்து பார்ப்பவர்.
நாடகத்தை தனது கற்பனையால் பார்த்து ரசிப்பவர்.
நாடகத்தின் வெற்றிக்கு உதவுபவர்.
படச்சட்ட அரங்கின் 4ஆம் சுவராக இருப்பவர்.
(02 புள்ளி)

5) விமர்சகர்

நாடகத்தின் குறை, நிறைகளை மதிப்பிடுபவர்.
படைப்பின் வெற்றிக்கு உதவுபவர். (02 புள்ளி)
(12 புள்ளிகள்)
(5x12=60 புள்ளிகள்)

Printed by Kumaran Press Private Limited
kumbhlk@gmail.com